KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

# கலாநிலயம்

## A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஹு ஜூலை மீ 4 உ [No. 26

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 401
2. கலித்தொகை (மருதக்கலி 7.) T. A. கனகசபாபதி முதலியார் 403
3. ஒத்தெல்லோ (அங்கம் 3. களம் 1.) Shakespeare's 'Othello' 404
4. கம்பராமாயணம் (தானைகாண் படலம்) T. N. சேஷாசலம் B.A., B.L. 406
5. தமிழ்மொழியைக் குறித்த பழைய குறிப்புக்கள் S. சோமசுந்தர தேசிகர் 408
6. சூரியன் (பகல் நக்ஷத்திரம்) E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 411
7. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 10-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 413
8. வர்த்தமானம் 416

## கலாநிலயம்

### சமயக் காட்சி

பசியோடு வயிறு படுக்கின்றதெனின், அது செய்த
பாவம் அது; பசியற்ற வயிறு பதைக்கநேர்
கின்றதென்னின் யார்செய்யும் பாதகமோ இது!

இந்தக் கேள்வியைக் கேட்கத் தெரிந்தால் எத்தனையோ பலர் இனிது வாழும் இயல்பினராவார். வயிறு பசித்தல் உடலின் செய்தி, அது பதைத்தலோ உலகின் செயல். உலகின் செயலை உற்று நோக்காமல் உடலின் செய்தியை உன்னியுன்னி யுழைப்பதெல்லாம் வீண். இவ் வுலகம்முழுவதையும் நம்மொரு சிறு இதயத்தால் நிரப்பலாம். இப்படி உலகம் நிரம்புவதே இதயத்தின் நிறைவாம். இன்னவாறு உலகம் முழுவதையும் ஒரு இதயம் நிரப்பிவிடலாமானாலும், உலகம் முழுவதும் ஒரு இதயத்தின் ஒரு சிறு மூலையையும் நிரப்பப்போதாது. நிறைந்த இதயம் வயிற்றை நிரப்பிவிடும்; மற்று, வயிற்றினால் இதயம் நிறையுமென்பது ஒருபோதுமில்லை. வயிறு நிறைய நிறைய இதயத்தின் வெறுமையே மேலெழுந்து தோன்றுகின்றது. இதயத்தின் திரட்சியாலன்றி வயிற்றின் வீக்கத்தால் ஒருவரும் மனிதராகமாட்டார். உலகத்தைத் தன்னுள் தழுவிக் கொள்ளும்படி இதயம் படர்ந்து சூழ்கின்ற தன்மையிற்றான் அதன் திரட்சியைக் காணல்வேண்டும். வயிறு நிறைவதற்கு ஒன்றும் வாயை அசைக்க வேண்டா. செல்வம் செழிக்கச் செழிக்க மனிதர் அழுகுகின்ற பரிபவத்தைக் கருதி ஆங்கில கவி ஆலிவர் கோல்ட்ஸ்மித் என்பவர் (where wealth accumulates and men decay) என வேதனைப் படுகின்றார். இப்படித்தான் நேரவேண்டும் என்னும் அவசியம் ஒன்றுமில்லை. ஆயினும், பணமிருக்கும் வீட்டிலெல்லாம் இந்தப் பரிபவத்தைக் காணலாம். உலகின் செயலை உற்று உணராமையே இதற்குக் காரணம். உலகத்தை வயிற்றி லடக்கவேண்டுமென்னும் முயற்சியின் அவலமே இவ்வுணர்ச்சியின்மையின் விளைவு. மனிதரென்றிருப்போர் ஒருவராலும் இதனைச் சாதிக்க இயலாது. இது செய்வதாயின் திருமாலே வரவேண்டும். இதன் அருமையை அறிந்ததாலன்றோ உலகமுண்ட பெருமாளை, உண்ணப்பட்ட அவ்வுலகம், இன்றளவும் போற்றிவருகின்றது.

வயிற்றிற்கும் இதயத்திற்கும் இடையேயுள்ள இவ்வேற்றுமை மிகவும் முக்கியமானது. வயிறானது எல்லாவற்றையும் தன்னுள் புதைத்துக் கொள்ள முயல்கின்ற முயற்சியால் தன் பசியும் அடங்காமல் பிறர் பசியையும் பெருக்கி இதயத்திற் கெதிராக என்றுமே போராடிய வண்ணமாயிருக்கின்றது. இதயமோ, வயிறொடு பகையின்றி அதற்கு உணவளிக்க மறுக்காமல், உலகத்தைத் தன்னுடைய அன்பெனும் மந்திரப் போர்வையால் போர்த்து அதனை நன்மையாக மாற்றிவைக்கவேண்டும் என்னும் ஒரு ஊக்கமுடையதாகி அன்னது கைகூடும் வேளையை உவகையுடன் எதிர்நோக்கிய வண்ணமா யமைந்திருக்கின்றது. சரித்திரத்திற்குட்பட்ட ஒவ்வொரு

காலத்திலும் மனித சமூகம் ஒவ்வொன்றிலும் மானுடவாழ்க்கையின் பொருளும் பயனும் இன்னதுதான் என்பதைப்பற்றியவோர் உணர்ச்சி இல்லாமற்போனதில்லை. அவ்வக்காலத்தில் தென்பட்ட அவ்வவ்வுணர்ச்சியின் அளவினால் அவ்வந்த மனிதர் தம் வாழ்க்கையை உயர்த்திக்கொண்டிருந்த மேன்மையைத் தெரிந்துகொள்ளலாம். வாழ்க்கையின் உயரமும், சனங்கள் நாடுகின்ற நன்மையின் உயரமும் ஓரளவினவாக இருக்கும்.

இவ்வண்ணம் இதயமானது தன்னுள் இயற்கையாகப் பெருகும் அன்புபற்றி உலகத்தை நன்மைசெய்து காணவேண்டுமென்று உவக்கின்றஉணர்ச்சியின் தொகுதியே சனங்களின் சமயக்காட்சி எனக்கூறுவதற்கு இயன்றதாகி யிருக்கின்றது. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு தத்துவச் செல்வம் வாய்ந்த வித்தகன் தோன்றி இச்சமயக்காட்சியின் தோற்றத்தைத் தெளிவுறப்பேசி விளக்கக் கூடியவனாகின்றான். ஜனங்களும், காட்சிமுழுவதையும் கலக்கமின்றிக் காணமாட்டாதவராயினும், அதன் தன்மையும் ஒளியும் இன்னவாறாகுமென்பதை ஓரளவு உணராமற்போவாரல்லர். இத்தகைய சமயக் காட்சியும் அதற்குரிய விளக்கமும் எக்காலத்திலும் எல்லாச் சனசமூகத்திலும்இருந்திருக்கின்றன. எனினும், இக்காலத்தில் இந்தச் சமயக்காட்சியேனும் விளக்கமேனும் உணர்ச்சியேனும் இல்லையே என்று சிலர் எண்ணலாம். உற்று நோக்குங்கால், இல்லைபோல் தோன்றுகின்றனவேயொழிய அவை இல்லாமல் இல்லை. அவை இருக்கத்தான் இருக்கின்றன; இருக்கும் அதனை நாம் பார்க்க விரும்புவதில்லை.

சமயக்காட்சியும் உணர்வும் இருக்கின்றனவென்னின், அவைகளை நாம் ஏன் பார்க்கவிரும்புவதில்லை என்ற கேள்வி விளையும். இதன் காரணத்தை, நாம் வாழ்கின்ற வாழ்க்கை எவ்வகையினதாக அமைந்திருக்கின்றது என்பதனுள் காணல்வேண்டும். சமயக் காட்சிக்கு முற்றிலும்மாறாகவே நம்முடைய தற்கால வாழ்க்கைமுறை நடப்பதால் அக்காட்சியைக்காணுந்தோறும் கண்கள் கூசிக்கூசிப் பார்ப்பதற்கு விரும்பாதவர்கள் ஆகின்றோம் என்பதல்லால் வேறில்லை.

ஆயினும் ஒன்று. சமயக்காட்சியென்பதெல்லாம் ஒரு மூடநம்பிக்கையே என்றும், அதனைக் கடந்து தெளிந்து வளர்ந்த அறிவினர்களாகிவிட்டோமென்றும், சமய உணர்வு என்பதே ஒன்று இல்லையென்றும், பாவித்து நடக்கின்ற அபிப்பிராயம் ஒன்று தற்காலம் வெளிப்பட்டிருக்கின்றதென்பதை நாம் அறிவோம். படித்தவர் என்ற பெயருடைய கூட்டத்தினரிடையே இந்தப் பேச்சுங் கருத்தும் அவைகளுக்கேற்ற காரியங்களும் அதிகரித்து வருகின்றன. சமயக்காட்சியை நம்புவதாயின், வியாபாரத்திலும் வர்த்தகத்திலும் உத்தியோகத்திலும் வழக்கிலும் வேறு எத்தனையோபல கைகளிலும் உடலை மெய்ம்மையை உணர்வை, அமைதியை, அறத்தை, மனச்சாக்ஷியை விற்றுவிற்றுப் பொருள்செய்ய முயல்வதும் முயன்றும்பயன்பெறாமல் தாமும் வருந்திப் பிறரையும் வருத்துவதும், பொருள் செய்தாலும் அப்பொருளைக் கள் காமம் களியாட்டம் இடம்பம் முதலியவகைகளில் செலவுசெய்து அலைவதும் ஆகியுள்ள இவ்வாழ்க்கையின் அவலத் தோற்றம் இருளிற் காணும் கொள்ளிவாய்ப் பேயென்னத் தோன்றி அச்சம் பெரிது விளைவிக்கும் என்பதை அறியமாட்டாதவர் மிகச் சிலரே. இவ்வாழ்க்கையோ பயனற்றது, நேர்மையும் இல்லாதது. எனினும் இதனைக் கைவிட மனம் வரவில்லை; சமயக் காட்சியோ இதற்குமாறாக இருக்கின்றது, இந்நிலையில் என்ன செய்வது? சமயக் காட்சியே பொய்யாம் என்னும் ஒரு பொய்யினால் இந்தப் பொய்வாழ்க்கைக்கு ஓர் ஆதாரம் தேடவேண்டியது அவசியமாகின்றது. இதுபற்றிப் புதிய புதிய வாழ்க்கைமுறைகளைக் கற்பனைசெய்யத் தலைப்படுகின்றனர். வேறு வேறு தேயங்களின் சரித்திரங்களையும் நிலைமைகளையும் திரித்துத் திரித்துக் காட்டத் தலைப்படுகின்றனர். செய்கின்றதீவினையிருக்க, அத்துணைத் துன்பங்களுக்கும் சமயக் கோட்பாடுகள்தாம் காரணம் என்கின்றனர். இப்படிப்பட்டவர்களில் தெரிந்தே பலரும் தெரியாமற் சிற் சிலரும் சமயக்காட்சிக்கும் சமயச் சடங்குகளுக்கும் வேற்றுமை கொள்ளாமற் குழப்பி, சமயச் சடங்குகளை மறுக்கும் முகத்தால், சமயக்காட்சியே யில்லாமல் தொலைத்துவிடலாம் என்று எதிர்பார்க்கின்றார் போலும். இதுவோ சற்றேனும் பயன்படாது. இந்த மூர்க்கமானது முதலில் வெல்வதுபோலத் தோன்றினாலும், இறுதியில் சமயக்காட்சியே தான் சாச்வதமான தென்பதைச் சாதித்துவிடும். சமயங்களை எதிர்க்கின்ற எதிர்ப்பும், சமயக்காட்சிக்கு மாறான வாழ்க்கைமுறை யொன்று உண்டென்னுங் கருத்தை நிறுவுதற்கு முயல்கின்ற முயற்சியுமே, தன்னோடு இணங்காத வாழ்க்கையில் தாழ்வாரைத் தண்டிக்கவல்ல ஓர் சமயக் காட்சி சாச்வதமாயிருக்கின்றதென்னுஞ்செய்தியை மிகவும் இரகசியமாகவேனும் தெரிவிக்கின்றதல்லவா?

மனித வாழ்க்கை பின்னே பின்னே தயங்கி அழுகாமல் முன்சென்று முறைமைப்பட்டு ஓங்கவேண்டுமானால் அதற்கு ஓர் வழிகாட்டி இருக்கவேண்டுமென்பது அவசியம். எக்காலத்திலும் சமயங்களே சாரும் நெறிகாட்டும் சாதனங்களா யமைந்திருக்கின்றன. சமயத்தினாலல்லது மானுட இனம் முன்னேறியதில்லை யென்பதை ஒவ்வொரு சரித்திரத்திலும் பரக்கப் படிக்கலாம். மற்றொன்றும் சரித்திரத்தினின்று கற்கவேண்டிய பாடம் உளது. சமயக் காட்சியை மறுத்து வாழ்க்கைமுறை யமைக்கப் புக்கவர் அனைவரும் தம்மைச் சரித்திரத் தொடர்பினின்று அழித்துக்கொண்டனர்களே யல்லாமல் அந்தக் காட்சியும் அக்காட்சிக்கு ஆதாரமாகிய உணர்வும், அவ்வுணர்வினின்று பிறக்கின்ற உறவும் ஒருபோதும் ஒழிக்கப் பெற்றதில்லை என்பதை நாம் மறத்தலாகாது. சமயச் சடங்குகளை ஒழிக்க முயல்வது பெரிய காரியமில்லை; அவை காலதேசவர்த்தமானங்களுக்கு இணங்கத் தாமே மறைந்தும் மாறியும் புதிதுபுதிதாகத் தோன்றியும் வருவது இயற்கை. ஆகையால் சில சடங்குகளையும் ஆசாரங்களையும் தொலைத்துவிட்டதாகவும் மாற்றிவிட்டதாகவும் ஒருவரும் வீரம்

பேசிக்கொள்ளவேண்டா. மாறியதால் நன்மையோ தீமையோ என்னும் ஐயமும் கேள்வியும் ஒருபுறம் இருக்க, சீர்திருத்தக்காரர்களின் ஆரவாரங்கள் இன்றியே இன்னவை நேர்ந்திருக்கும். மற்று விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அழிக்கமாட்டால் அணையமாட்டால் என்றும் எல்லாரிடத்தும் நிலைபெற்றிருப்பது சமய உணர்ச்சி; உலகப் பொது அரங்கில் ஓயாமல் தென்பட்டுக்கொண்டிருப்பது சமயக் காட்சி; இவ்வுணர்ச்சி சிறிது உறங்குவது போலிருக்கலாம், ஆயினும் ஒருபோதும் சாகாது; இக்காட்சி சிறிது மங்கலாகத் தோன்றலாம், ஆயினும் ஒரு போதும் மறையாது.

உறங்கும் உணர்வை எழுப்புவதற்கும், மயங்கிய காட்சியைத் தெளிவிப்பதற்கும் கைகண்ட கருவியாய் அமைவது கலை. ஆதலாற்றான் மானுட வாழ்க்கையின் ஆதாரமாக அதுவொன்றே அமைதல் வேண்டுமென்று டால்ஸ்டாய் முறையிடுகின்றார்; கலாநிலயமும் அதனைக் கருத்துறப் பின்பற்றுகின்றது.

---

# கலித்தொகை

[392-வது பக்கத் தொடர்ச்சி]

### மருதக்கலி 7.

பரத்தையர் சேரியிலிருந்து தலைவன் வந்தனன் என அறிந்த காமக்கிழத்தி தன் காதல்மிகுதி கூறி ஊடினாள். அதனை உணர்ந்து அவன் அவளைச் சார்ந்து நின்றான். அவனைக் கண்டு ஊடல் தீர்கின்றவளாய் அவள் கூறியதைக் கூறுவது இச் செய்யுள்.

இணைபட நிவந்த நீலமென் சேக்கையுட்
டுணைபுணை ரன்னத்தின் றூவிமெல் லணையசைஇச்
சேடியல் வள்ளத்துப் பெய்தபால் சிலகாட்டி
யூடுமென் சிறுகிளி யுணர்ப்பவண் முகம்போலப்
புதுநீர புதலொற்றப் புணர்திரைப் பிதிர்மல்க
மதிநோக்கி யலர்வித்த வாம்பல்வான் மலர்நண்ணிக்
கடிகயத் தாமரைக் கமழ்முகை கரைமாவின்
வடிதீண்ட வாய்விடூஉம் வயலணி நல்லூர

கண்ணிநீ கடிகொண்டார்க் கனைதொறும் யாமழப்
பண்ணினாற் களிப்பிக்கும் பாணன்காட் டென்றானே
பேணானென் றுடன்றவ ருகிர்செய்த வடுவினான்
மேனாணின் றோள்சேர்ந்தார் நகைசேர்ந்த விதழினை

நாடிநின் றூதாடித் துறைச்செல்லா ளூரவ
ராடைகொண் டொலிக்குநின் புலைத்திகாட் டென்
[றானோ

கூடியார் புனலாடப் புணையாய மார்பினி
னூடியா ரெறிதர வொளிவிட்ட வரக்கினை

வெறிதுநின் புகழ்களை வேண்டாரி லெடுத்தேத்து
மறிவுடை யந்தண னவளைக்காட் டென்றானே
களிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட வுருவின்மேற்
குறிபெற்றார் குறற்கூந்தற் கோடுளர்ந்த துகளினை
எனவாங்கு
செறிவுற்றே மெம்மைநீ செறிய வறிவுற்
றழிந்துகு நெஞ்சத்தே மல்ல லுழப்பக்
கழிந்தவை யுள்ளாது கண்ட விடத்தே
யழிந்துநிற் பேணிக் கொளலி னிழிந்ததோ
வின்னோ யுழத்த லெமக்கு.

### தரவு

(வரி 1-8) இணைபட (ஐந்து மெத்தைகள் ஒன்றின் மேல் ஒன்று) பொருந்துதலால், நிவந்த - உயர்ந்த, நீல மென் சேக்கையுள் - நீலப்பட்டு விரித்த மென்மையான படுக்கையில், துணை புணர்-பெண் அன்னத்தோடு கூடிய, அன்னத்தின் - ஆண் அன்னத்தின், தூவி-(அடிவயிற்றிலிருந்து கூடிய அக்காலத்தில் உதிர்ந்த) இறகால் செய்த மெல் அணை அசைஇ - (மெத்தைகள் ஐந்தனுள்ளும் மேலேயுள்ள) மெல்லிய படுக்கையில் அமர்ந்து, சேடு இயல் - பெருமையாகச் செய்யப்பட்ட, வள்ளத்து - கிண்ணத்தில், பெய்த பால் சில காட்டி - வார்த்த பால் சிறிதினைக்காட்டி, ஊடும் மென் சிறு கிளி - அப்பாலை உண்ணற்கு வெறுக்கும் மெல்லிய சிறிய கிளியை, உணர்ப்பவள் - அவ்வெறுப்பைத் தீர்ப்பவளுடைய, முகம்போல - முகத்தைப்போல, புது நீர - புதியதாகிய நீரிலேயுள்ள, புதல் ஒற்ற - சிறு தூறுகளை மோதுதலால், புணர் திரை ஒன்றோடொன்று கூடிய அலைகளின், பிதிர் மல்க - சிறு துளிகள் மிகவும் தெறிப்பதால் இடையிலுள்ள, மதி நோக்கி - சந்திரனை நோக்கி, அலர்வித்த-மலர்ந்த, ஆம்பல் வான் மலர் - ஆம்பலின் வெண்மையாகிய மலரை, நண்ணி - அடைந்து, கடிகயம் தாமரை-காவலையுடைய குளத்திலுள்ள தாமரையினது, கமழ் முகை - கமழ்கின்ற மொக்கு, கரைமாவின் வடி தீண்ட - கரையிலுள்ள மாமரத்தினுடைய வடுவானது தீண்டுதலால், வாய்விடூஉம்-மலரும், வயல் அணி நல் ஊர - வயல்களால் அழகுபெற்ற நல்ல ஊருக்குத்தலைவனே.

சிறு தூறுகளையுடைய புது நீர், கயத்திலே வந்தடைகின்றதென்றும், அத்தூறுகளை அலைகள் மோதுகின்றன என்றும் அவைகளுக்கிடையே மதியைக்கண்டு ஆம்பல் அலர்கின்றது என்றும், அக்கயத்தின் கரையிலுள்ள மாமரத்தின் வடு முதலில் ஆம்பலைத் தீண்டிப் பின்னர் ஆண்டுள்ள தாமரைமொக்கைத் தீண்டுகின்றதென்றும், அதனால் அம்மொக்குச் சிறிது மலர்கின்றதென்றும் கொள்க.

### தாழிசை

(வரி 9-12) பேணான் என்று - இவன் நம்மை விரும்புகின்றான் அல்லன் என்று, உடன்றவர்-நின்மேல் கோபங்கொண்ட சில பரத்தையர், உகிர் செய்த வடுவினான் - தமது நகத்தால் செய்த வடுவோடு கூட, மேல் நாள் - பின்னை நாள், நின் தோள் சேர்ந்தார் - நினது மார்பை அணைந்தவரது, நகை சேர்ந்த இதழினை - பற்கள் சேர்ந்ததால் உண்டாகிய வடுவினையும் பெற்ற இந்த உதடுகளை, கண்ணி நீ - (நமக்குத் தக்கவர் என்று) கருதி நீ, கடிகொண்டார் - மணம்கொண்ட மகளிரை, கனைதொறும்- நீ கூடுந்தோறும், யாம் அழ - யாங்கள் அழ, பண்ணினால் களிப்பிக்கும்-தனது யாழ்ப்பாட்டின் இராகத்தால் நினக்குக் காமமூட்டும், பாணன் காட்டு என்றானோ - நின்பாணன் எனக்குக் காட்டு என்று சொன்னானோ?

(வரி13-15) நாடி (உனக்குத்தக்க பரத்தையர் யார் என)ஆராய்ந்து, நின் தூது ஆடி-(அவரிடம்) உனது தூதா

கச்சென்று, துறைசெல்லாள்-துறைக்குப் போகாதவளாய், ஊரவர் ஆடைகொண்டு ஒலிக்கும்-ஊரார் ஆடைகளைக் கொண்டு போய் வெளுக்கும் தொழிலுடைய, நின் புலைத்தி - உனது வண்ணாத்தி, கூடியார் - நின்னொடு கூடிய பரத்தையர், புனல் ஆட - நீரில் விளையாடுதற்கு, புணையாய - தெப்பமாகிய, மார்பினில் - மார்பிலே, ஊடியார் (அப்புனலாட்டைப்பெறாது) ஊடல் கொண்ட மகளிர், எறிதர - எறிந்ததால், ஒளிவிட்ட அரக்கினை - விளங்குகின்ற சாதிலிங்கத்தை, காட்டு என்றாளோ - எனக்குக் காட்டு என்று சொன்னாளோ ?

(வரி17-21) வெறிது நின் புகழ்களை - சிறிதும் நினது புகழ்களை, வேண்டாதார் இல் எடுத்து எத்தும் - விரும்பாதவராகிய எமது இல்லில் (வந்து) மிகுத்துக்கூறும், அறிவுடை அந்தணன்-நின் தூதாகிய அறிவில்லாப்பார்ப்பான், களிபட்டார்-கள்ளின் மயக்கம் பொருந்திய பரத்தையருடைய, கமழ்கோதை - மணம் வீசும் மாலை முயக்கத்தால், கயம்பட்ட - கன்றிப்போன, உருவின்மேல் - நின்மார்பின்மீது, குறி பெற்றார் - குறிப்பிட்ட இடத்தில் வந்து உன்னைக்கூடிய பரத்தையரின், குரல் - கொத்தாகிய,கூந்தல் கோடு-கொண்டையை, உளர்ந்த-(நீ வகிர்ந்து அழகு செய்து முடித்ததாலே)விழுந்து கிடந்த,துகளினை-நின் மீது விழுந்து கிடக்கும் பொடிகளை, அவளை காட்டு என்றானோ - எனக்குக் காட்டு என்று சொன்னானோ ?

அறிவுடை அந்தணன் - இகழ்ச்சிக்குறிப்பு.

அவளை-உருபு மயக்கம்; அன்றியும்,தன்மைக்குப்படர்க்கை வந்தமை இகழ்ச்சிக் குறிப்பு. உரு - ஈண்டு மார்பை உணர்த்திற்று.

தனிச்சொல்

என ஆங்கு - அசை

சுரிதகம்

(வரி 22- 26) எம்மை நீ செறிய - முன்பு எம்மை நீ அடைய, செறிவுஉற்றேம்-யாமும் நின்னொடுசேர்ந்தோம். அறிவு உற்று -(இக்காலத்தில் நீ செய்யும் குறைகளை) அறிந்து, அழிந்து உகு நெஞ்சத்தேம் - அழிந்து கெடுகின்ற நெஞ்சை யுடையயாம், அல்லல் உழப்ப - துன்பத்தால் வருந்தினாலும், கழிந்தவை உள்ளாது-சென்றவைகளை நினையாமல், கண்ட இடத்தே-நின்னைப்பார்த்த பொழுதே, அழிந்து - மனம் கலங்கி, நின் பேணி - நின்னை விரும்பி, கொளலின் - எற்றுக்கொள்ளுதலைப் பார்க்கிலும், இந்நோய் உழத்தல் எமக்கு இழிந்ததோ - இந்தக் காம நோயாலே வருந்தியிருத்தல் எமக்கு இழிவான தொரு தொழிலோ.

---

# ஒத்தெல்லோ

## [Shakespeare's —"Othello"]

[391-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 1.

இடம்:—மாளிகைக்கு முன்புறம்.

காஸ்ஸியோவும் சில பாடகர்களும் வருகின்றனர்.

காஸ்ஸியோ:— ஐயன்மீர், இங்கு வாசியுங்கள்,— உங்கள் வருத்தத்தைத் திருப்திசெய்வேன்—சுருக்கமானதேதேனும்; 'நல்லுதயம் போர்த்தலைவா' எனப் போற்றுங்கள்[1].

[வாத்தியங்கள் வாசிக்கின்றனர்]

விதூஷகன் வருகிறான்.[2]

விதூஷகன்:— ஏனிது, ஐயன்மீர், உங்கள் கருவிகள் நேப்ல்ஸில் இருந்திருக்கின்றனவா, என்ன; இப்படி மூக்கினாற் பேசுகின்றனவே?[3]

முதல் பாடகன்:— எப்படி, ஐயா, எப்படி?[4]

விதூ:-இவை, காற்றுக் கருவிகள் என்று அழைக்கப்படுகின்றனவோ, சொல்லுங்கள்?

முதல் பா:— ஆம், ஐயா, அழைக்கப்படுகின்றன அவை.

விதூ:— ஓ, அதனின்று ஒரு வாலதி தொங்குகின்றது.[5]

முல்த பா:— எதனின்று ஒரு வதந்தி தொங்குகின்றது, ஐயா?[6]

விதூ:—நானறிந்த காற்றுக் கருவிகள் பலவற்றினின்று, ஐயா.[7] மற்று, இதோ உனக்குப் பணம்; அன்புகூர்ந்து இனி இதனைக்கொண்டு நீங்கள் ஒன்றும் ஓசைசெய்ய வேண்டாவென்று வேண்டுமளவு தலைவன் உங்கள் இசையை விரும்புகின்றான்.[8]

முதல் பா:—நல்லது, ஐயா, செய்யமாட்டோம்.

(1) முன்னிரவு மணவறைசேர்ந்த ஒத்தெல்லோவிற்கும் டெஸ்டிமோனாவிற்கும், பள்ளியெழுச்சி பாடும்படி காஸ்ஸியோ எற்பாடு செய்கின்றான். இவ்வழக்கம் மேல்நாட்டிலும் இருந்தது.

ஐயன்மீர், என்பது பாடகர்களை அழைப்பது. இங்கு வாசியுங்கள் - இவ்விடத்தில் இருந்துகொண்டு உங்கள் இசைக்கருவிகளை வாசியுங்கள். உங்கள்...செய்வேன்- சிரமத்திற்குத் தகுந்த சன்மானம் செய்வேன்.

'இன்றைப்பொழுது உனக்கு நல்லதாகப் புலரட்டும்' என்று பொருள்படும்படி பாடி வாழ்த்துங்கள் - என்கின்றான்.

(2) வடமொழி நாடகங்களிற்போல், ஷேக்ஸ்ப்பியர் நாடகங்கள் சிலவற்றிலும் விதூஷகன் வருவதுண்டு. இவ்விதூஷகன் உலக அனுபவத்தை நகையுறச் சுவையுடன் பேசுபவனாக இருப்பான். ஆயினும் இந்நாடகத்தில் வருகின்ற இந்த விதூஷகனிடத்தில் அத்தகைய சுவையொன்றுங் காணவில்லை. இதற்குப் பின் இவன் இந்நாடகத்தில் தோன்றுவதும் சிறிதே. விதூஷகனை வரவழைத்த ஷேக்ஸ்ப்பியர், பிறகு இந்நாடகத்தில் அவன் அமையவில்லை என எண்ணி விட்டுவிட்டார்போலும். ஷேக்ஸ்ப்பியர் வாசகர்களுக்கு இந்நாடகத்தில் ஒரு விதூஷகன் உண்டு என்பது கூட நினைவிருப்பதில்லை. இவனை 'விதூஷகன்' என்று அழைப்பதைக் காட்டிலும் ஒத்தெல்லோவின் வேலையாட்களில் ஒருவனாகக் கருதுவதே நேர்.

(3) நேப்ல்ஸ் நகரத்துச் சனங்கள் "னொண னொண" என்று மூக்கினால் பேசும் பழக்கமுடையவர் என்றுபரிகசிப்பதுண்டு. "உங்கள் வாத்தியங்களிலிருந்து வரும் ஒலி னொண னொண' வென்றிருப்பதால் அவை நேப்ல்ஸ் நகரத்தில் இருந்தனவோ - என்று கேட்கிறான்.

(4) விளங்கவில்லையே, என்ன சொல்கிறாய் - என்பது பொருள்.

விதூ:—காதிற்படாதபடி இசைக்கக்கூடிய இசை ஏதேனும் உங்களிடம் இருக்குமாயின், மறுபடி துவக்குங்கள்; மற்று, எல்லோரும் சொல்வதுபோல், இசையைக் கேட்க எங்கள் தலைவன் பெரிது கருதுவதில்லை. [9]

முதல் பா:— அப்படிப்பட்டது, ஐயா, எங்களிடம் ஒன்றுமில்லை.

விதூ:—ஆயின் உங்கள் குழல்களைப் பையில் போட்டுவிடுங்கள், நான் அகல்வேன். போங்கள்;காற்றினுள் மறைந்துவிடுங்கள், அகலுங்கள் !

(பாடகர் போகின்றனர்)

காஸ்:—எனது உண்மை நண்பன், பேசக் கேட்கின்றாயோ ?[10]

விதூ:—இல்லை, உன் உண்மை நண்பன் பேச நான் கேட்கவில்லை; உன்னையே கேட்கின்றேன்.

காஸ்:—வேண்டிக் கொள்கிறேன், நின் சித்திரப் பேச்சுக்களை அப்புறம் வை. ஏழைப் பொற்காசு ஒன்று இதோ உனக்கு உளது.[11] தலைவனது மனைவியுட னிருக்கும் அவள் நடமாடிக்கொண்டிருப்பாளானால், காஸ்வியோ என்பவன் ஒருவன், சிறிது பேசும் தயவை வேண்டுகின்றான் என்று அவளிடம் சொல். இது செய்வாயோ, நீ ?

விதூ:—ஐயா, அவள் நடமாடிக்கொண்டிருக்கிறாள்: இந்தப் பக்கம் நடமாடுவாளானால், அவளிடம் இதனைத் தெரிவிப்பவனாகத் தென்படுவேன்.[12]

காஸ்:—நல்லவென் நண்ப, செய்.

(விதூஷகன் போகிறான்)

[இயாகோ வருகிறான்.]

காஸ்:—நல்ல வேளை, இயாகோ.[13]

இயா;—ஆயின், நீ படுக்கவே இல்லை?[14]

காஸ்:—ஏன், இல்லை; நாம் பிரிவதன்முன் பொழுதும் புலர்ந்துவிட்டது, நின் மனைவிக்குச் சொல்லியனுப்ப, இயாகோ, நான் துணிந்திருக்கிறேன். அவளிடம் நான் வேண்டிக்கொள்வது, உத்தமி டெஸ்டிமோனவை நான் அடைவதற்கு ஏதேனும் வழியமைத்துத்தர அவள் இசையவேண்டும் என்பதே.[15]

இயா:—அவளை நான் இப்பொழுதே உன்னிடம் அனுப்புகின்றேன். உன்பேச்சும் காரியமும் பின்னும் இடையூறின்றி நடக்கும்படி மூரனை வழியினின்று விலக்கி இழுத்துச்செல்ல ஒரு உபாயமும் செய்வேன்.[16]

காஸ்:—உனக்கு நான் இதன்பொருட்டுத் தாழ்மையுடன் வந்தனம் செலுத்துகின்றேன்.

(இயாகோ போகிறான்)

காஸ்:—இவனினும் அதிகம் அன்பும் உண்மையும் வாய்ந்த, ப்ளாரன்ஸ் நகரத்தவன் ஒருவன் நான் அறிந்ததில்லை[17].

எமிலியா வருகிறாள்

எமிலியா:—நல்ல அடுத்த அதிகாரியே, நற்காலை உனக்கு. நீ அடைந்த அதிருப்திக்காக நான் வருந்துகின்றேன்[18]. எனினும், எல்லாம் நன்றாகிவிடும்; நிச்சயம். தலைவனும் அவன் மனைவியும் இதனைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நின் பொருட்டு அவள் திண்ணிதின் பேசுகின்றாள்[19]. நீ தீங்கு செய்த அவன், ஸைப்ரஸ்ஸில் பெரிய கீர்த்தியுடையவனென்றும் பெரிய தொடர்பு உடையவனென்றும், நல்லறிவின்படி நின்னை மறப்பதன்றித்தானென்றும்

(5) (6) (7) வாலதி - வால். காற்றுக் கருவி - காற்றை ஊதி வாசிக்கும் இசைக் கருவி. இசைக் கருவியிலிருந்து தொங்கும் கயிறு பட்டுநூல்கள் முதலியவைகளை விதூஷகன் வால் என்று அழைக்கிறான். இது விளங்காமல், வாலதி என்பதை வதந்தி என்ற சொல்லாகக் கொண்டு. 'இக்கருவிகளைப்பற்றி என்ன வதந்தி கேள்விப்பட்டிருக்கிறாய்' என்று பாடகன் வினவுகின்றான். விதூஷகன், வால் என்னும் பொருளிலேயே பதிற் சொல்கிறான்.

(8) உங்கள் பாட்டை விரும்பாதலால் அதனை நிறுத்தி விடுவதற்கு இதோ பணம் கொடுக்கின்றேன் - என்பது பொருள்.

(9) காதிற் கேட்காதபடி இசைப்பது என்பது, இசையே எழுப்பவேண்டா என்னும் பொருளுடையது.

(10) எனது உண்மை நண்பனே நான் சொல்வதைக் கேள் - என்பது பொருள். நண்பன், இங்கு அண்மை விளி, நண்பா, என்னும் பொருளுடையது. எனினும், இதை முதல்வேற்றுமையாகக் கொண்டு விதூஷகன் பதிற்சொல்கிறான்.

(11) ... என்று கூறி அவனுக்கு ஒரு பொற்காசு கொடுக்கின்றான். செய்யும் உதவிக்குப் போதிய பிரதி பலன் ஆகாது என்னும் பொருளில், "ஏழைப் பொற்காசு" என்கின்றான்.

(12) தெரிவிப்பேன், என்றாற் போதும். பேச்சில்வல்லவனென்று தன்னைத் தெரிவித்துக்கொள்ள முயல்கின்ற விதூஷகன், 'தெரிவிப்பவனாகத் தென்படுவேன்" என்று வாக்கியத்தை வீணே குழப்புகின்றான்.

(13) நல்ல வேளையில் நீ வந்தாய் இயகோ - என்பது பொருள்.

(14) காஸ்வியோவின் தோற்றத்திலிருந்து அவன் இரவுமுழுவதும் படுத்து நித்திரை செய்ததில்லை என்பதை அறிந்த இயாகோ இப்படிக் கேட்கிறான்.

(15) தனியாக நான் டெஸ்டிமோனவைக் கண்டு பேசும்வண்ணம் நாங்கள் இருவரும் சந்திப்பதற்குஏற்பாடு செய்யும்படி வேண்டிக் கொள்ளவே, நான் உன் மனைவிக்குச் சொல்லியனுப்பியிருக்கின்றேன் - என்பது பொருள். இப்படி நான் செய்யத் துணிந்தது தக்கதே என்று நீயும் எண்ணுவாய், என்னுங் குறிப்பு இதனுள் அடங்கியிருக்கிறது. இயாகோ வீசிய வலையில் காஸ்வியோ இங்ஙனம் விழுகின்றான்.

(16) எல்லா விதத்திலும் காஸ்வியோவிற்கு உதவி செய்ய முயல்பவன்போல் இயாகோ, அவனுடைய நாசத்திற்கே வழிசெய்கின்றான்.

(17) இயாகோ வெனிஸ் நகரத்தைச் சேர்ந்தவன். காஸ்வியோ, ப்ளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்தவன். இயாகோவினளவு உண்மையும் அன்பும் வாய்ந்தவன் ஒருவன் தன் நகரத்தில்கூட கண்டதில்லையென்று காஸ்வியோ வியந்து பாராட்டுகின்றான். இந்நாடகத்தில் எல்லோருமே இப்படி இயாகோவைக் கண்டு மயங்குகின்றனர்.

(18) ஒத்தெல்லோ உன் மீது கோபங்கொள்ள நேர்ந்ததற்காக நான் வருந்துகின்றேன் - என்பது பொருள்.

(19) உனக்காக விடாப்பிடியாய்ப் பலமாகப் பரிந்து பேசுகின்றாள் - என்பது பொருள்.

(20) நீ தீங்குசெய்த அவன் - மாண்டானோ. மாண்டானோ, கீர்த்தியும் உயர்ந்த பதவியில் இருக்கும் உறவினர்களும் உடையவனாகையால், அவனைக் காயப்படுத்தின உன்னைத் தண்டிக்காமல் விட்டால், ஜனங்கள் திருப்தியடைய மாட்டார்களாகையால், உன்னுடைய வேண்டு

செய்யலாகாதென்றும் மூரன் பதிற்சொல்கின்றுன்[20]. ஆயினும் தானுன்னை நேசிக்கின்றுன் என்று உறுதிகூறி, உன்னை மீண்டும் உள்ளே கொண்டுவர, தகுந்த சந்தர்ப்பத்தை முன்புரம் பற்றிக்கொள்வதற்குத் தன் விருப்பமன்றி வேறு மன்றுடுவோர் ஒருவரும் வேண்டாவென்று செப்புகின்றுன்[21].

காஸ்:—எனினும், உன்னை வேண்டிக்கொள்கின்றேன் - தக்கதென்று நீ எண்ணினுல், அதனைச் செய்யலாமாயின் - டெஸ்டிமோனுவுடன் நான் தனியே சிறிது பேசும் நன்மையை எனக்குச் செய்[22].

எமி:—தயைசெய்து உள்ளே வா; நின் இதயத்தை இடையூறின்றிப் பேசுவதற்குக் காலம் வாய்க்குமிடத்தில் உன்னைச் சேர்க்கின்றேன்.

காஸ்:—நினக்கு யான் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(போகின்றனர்)

கோளிற்கு இப்பொழுது இணங்காமல் இருப்பதே நல்லறிவாகும் என்று ஒத்தெல்லோ பதில் சொல்லுகிறுன் - என்பது பொருள். தொடர்பு உடையவன் - நண்பர் உறவினர் முதலியவர் உடையவன்.

(21) உள்ளே கொண்டு வர - மீண்டும் உத்தியோகத்தில் அமர்த்த. சந்தர்ப்பத்தை முன்புறம் பற்றிக்கொள்வது - வாய்த்த சந்தர்ப்பத்தைத் தப்பவிடாமல் உடனே கைக்கொண்டு பயன்படுத்திக்கொள்வது.

காஸ்ஸியோவை மீண்டும் உத்தியோகத்தில் அமர்த்துவதற்கு, தான் அவன்மேல் வைத்துள்ள நேயமே போதுமாகையால், வேறு எவரும் அவன்பொருட்டுப் பரிந்து பேசுவது மிகை - என்பது பொருள்.

(22) நான் சொல்லது தக்கதென்றும் செய்யக்கூடியதென்றும் நீ எண்ணினுல் நான் டெஸ்டிமோனுவைத் தனியே சந்தித்துப் பேசும்படி உதவி செய்யவேண்டும் - என்பது பொருள்.

---

# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—11. தானைகாண் படலம்

[366-வது பக்கத் தொடர்ச்சி]

மனித காரியம் புனித மன்று.

இமையோர்க் குற்ற இடுக்கண்களை நீக்கும்பொருட்டு, ஒரு கொடுமனக் கூனியின் வஞ்சனையைத் தலைக்கீடாகக் கொண்டு, கானகங் கடந்துவந்த இராமபிரான், இனி, கடலைக்கடப்பதற்குக்குரக்கினத் துதவியை நாடிநிற்கின்றுன். அன்னவன்முன் வானர சேனைத்தலைவர் தத்தம் படைகளோடும் வருகின்றனர். அவர்தம் காட்சியைக் கம்பர் சில பாசுரங்களாலிரிதின் உரைக்கின்றுர்.

சதவலி யென்னும் வானரவீரன் பத்துலக்ஷம் யானைகளின் வலிமைவாய்ந்த வானரப்படைத் தலைவர் ஆயிரம் பேர் தன்னுடன் வர பதினுயிரகோடி வானர சேனையோடுஞ் சார்ந்தான். மேருமலையைப் பெயர்த்தெடுக்க வல்ல வலிமை வாய்ந்ததும் தேனைத் தெரிந்துண்டு மயக்கமின்றி யிருப்பதும் ஆன பத்து லக்ஷங் கோடி வானர சேனையுடனே சுசேடணன் வந்து தோன்றினன். இமைப்பொழுதினுள் கடலைக் கலக்கிச் சேருக்கவல்ல மிக்க திறல்வாய்ந்த நாற்பத்தெண்ணுயிரங்கோடி வானரசேனை உடன்வர அமுதமும் ஒப்பாகாத இனிய சொல்லையுடைய ருமையின் தந்தை வந்தான். இவ்வுலகத்தினும் மேலுலகத்தினும் நிலைபெற்ற கீர்த்தியையுடைய அநுமானைப் பெற்ற கேஸரி என்னும் வானர வீரன், ஐம்பது லக்ஷங் கோடித் தொகை பொருந்திய பெரிய மலைகளை யொத்த தோள்களையுடைய வானரசேனை சூழக் கடல்போல் வந்தான். கோபங்கொண்டால் சூரியனையும் வலிகெடும்படி அழிக்கவும் அகங்காரம் பிறந்தால் தனித்தனி இந்தப் பூமியைக் குத்தி உடைக்கவும் கூடிய நாலாயிரங் கோடி, வானர சேனை முன்வரக் கவாக்ஷன் என்பவன் வந்தான். தூமிரன் என்பவன், ஆதிவராகத்திற்கு நிகரான வலிமையும், பெரிய பெரிய மலையும் ஒரு மயிர்க் காலில் அடங்கும்படியான உருவமும் உடைய இரண்டாயிரங் கோடி காடிகளின் கூட்டத்துடன் அங்கு வந்துசேர்ந்தான். பனசன் என்பவன் பரிசுத்தமாகிய கொடுங் கோபமுடைய வானரப் படை பன்னிரண்டாயிரங் கோடியுடன் புகுந்தான் $. இடியுங் கடலும் அஞ்சும்படி முழங்குகின்ற யமனைப் போன்ற ஐம்பது கோடி வானர சேனையுடன் நீலன் புகுந்தனன். நெருப்புப் பொறிபறக்கும் கண்களையுடைய முப்பது கோடி வானரசேனையுடன் தரீமுகன் சார்ந்தான். முப்பதினுயிரம் வானரக் கடலுடன் வந்தான் கஜன். பெரிய நீண்ட மலையை ஒத்த உருவத்தோடு கூடிய தோள்களையுடைய ஜாம்பவானும், கடலின் அலைகள் போல் தாவித்தாவிக் கோபித்துத் தன்னுடனே தொடர்ந்துவர, ஆயிரத்தறுநூறு கோடி வானர சேனையுடன் வந்து தங்கினன். ஒப்பற்ற மிக்க வலிமையுடைய துன்முகன் என்பவன், உலகத்தைப் படைத்த பிரம்மதேவன், அரக்கர்களின் ஆயுளை நீ அழிக்கக் கடவாயாக, என்று கட்டளையிட்டதனுல் இரண்டு கோடி வானரசேனையை உடன்கொண்டு வந்து சேர்ந்தான். மாலை சூடியவோர் மலையைப் போன்ற துமிந்தன், கோடி கோடி இலக்ஷக்கணக்கான வானரக் கூட்டம் நெருங்கி வரத்தொடர்ந்தான். வெற்றியே ஒரு வடிவெடுத்தது போன்ற ஆற்றலுடைய மைந்தன் என்பவன், மல்யுத்தத்திற் சிறந்த கஜகோமுகன் என்பவனுடன் நூறு லக்ஷங்கோடி வானரசேனை தொடரவந்தான்.

$ ஆங்கில அறிஞர் தாமஸ் கார்லைல் என்பவரால் Righteous indignation என்று அழைக்கப்படுவதும், இதன்முன் இக்கட்டுரைகளில் செம்மைசேர் சீற்றம் என்று அழைக்கப்பட்டிருப்பதும், இந்தப் புனிதவெஞ்சினந்தான் போலும். சினமுறு மனமும் சிற்சில செவ்வியில் புனிதமாதல் கூடுமென்பதை உரைப்பார் உணர்வின் மிக்க மேலோர்.

காற்றையும் யமனையும் விடக் கடுமைவாய்ந்த ஒன்பது கோடி வானரசேனையுடன் குமுதன் என்பவன் சேர்ந்தான். ஊழிக்கடல் பொங்கி வந்தாலும் அழிவில்லாத பதுமுகன் என்பவன், நாற்பத்தொன்பதினாயிரங் கோடி வானரசேனையுடன் வந்துசேர்ந்தான். அத்தகைய சேனை தொளாயிரங்கோடியுடன் இடபன் என்பவனும் வந்து சேர்ந்தான். தீர்க்கபாதன், விந்தன், சரபன் முதலாயினோரும் அன்னவாறே வந்தனர். பின்னர்,

கையஞ் சாசர முடையவக் கடவுளைக் கண்டு
மெய்யஞ் சாதவன் மாதிரஞ் சிறிதென விரிந்த
வையஞ் சாய்வரத் திரிதரு வானர சேனை [தான்.
மையஞ் சாயிர கோடிகொண் டனுமன்வந் தடைந்

[அழகிய ஆயிரங் கிரணங்களையுடைய சூரியனைக் கண்டும் உடம்பில் அச்சங் கொள்ளாதவனான அனுமான் திசைகள் மிகச் சிறியன வெனும்படி பரவியுள்ள இப்பூமியானது ஒரு புறமாகச் சாயும்படி திரிகின்ற இருபத்தையாயிரங்கோடி வானர சேனையை உடன்கொண்டு வந்து அடைந்தான்]

இன்னபடியே, தெய்வத் தச்சனாகிய விச்வகர்மாவின் மகனாகிய அழகு மிக்க நளன் என்பவன், இச்சேனையின் எல்லை யாவதோ என்று தேவர்களும் அயிர்த்து நிற்கவும், யமனும் பிரமைகொண்ட மனத்தினால் கலக்கமெய்தித் திகைக்கவும் விரைவில் திரண்ட இலக்ஷங்கோடி வானர சேனையுடன் வந்துசேர்ந்தான். இனி,

கும்ப னுங்குலச் சங்கனு முதலினர் குரங்கிற்
றம்பெ ரும்படைத் தலைவர்க டரவந்த தானை
இம்பர் நின்றவர்க் கெண்ணரி திராகவ னவத்
தம்பெ னுந்துணைக் குரியமற் றுரைப்பரி தளவே.

[கும்பன் என்பவனும், சிறந்த சங்கன் என்பவனும் முதலானவர்களாகிய தம் பெரிய வானர சேனைகளுக்குத் தலைவர்கள் திரட்டிக்கொண்டு வர, வந்து சேர்ந்த வானர சேனையானது இவ்வுலகில் உள்ளவர்களால் கணக்கிடமுடியாததாய் இராமனது தூணியில் உள்ள அம்புகளில் அளவாம் என்னச் சொல்லத்தகுந்த அளவினையுடையது என்பதன்றி அச்சேனையின் அளவைப்பற்றி வேறுவகையாகச் சொல்வது அருமை]

கணித வித்தையில் நன்கு கைவந்தவர் கம்பர். இதுகாறும் வந்துசேர்ந்த வானரப்படைகளின் கோடிகளைக் கூட்டிக்கொண்டு வருவதானால் கணக்கிறந்த எண்ணையே (infinity) எய்தலாம்படி யாகின்றது. அதனை, இராமனது தோளிற்றொங்கிய புட்டிலினுள் அடங்கியுள அம்பின் தொகைக்கு அளவாக்கியது அதிசயமே என்னற்கு ஐயமில்லை. ஒரு தூணியுள் துறுத்தவல்ல அம்புகள் எத்தனை, மற்று, கோடி பல கோடிகளின்தொகைஎண் எத்தனை! எனினும், இவையிரண்டும் ஒக்குமென எளிதில் இயம்பிவிட்டார்இவ்வொரு புலவர். மற்றிதுவோ பிழையுமன்று. ஏனெனில், கணக்கினுள் அடங்கக்கூடியவைகளுக்கிடையே தான் மிகுதி குறைவுகளாம் வேற்றுமையுண்டு. எண் கடந்த நிலையில் எல்லாம் ஓரளவுடையவைகளே. அந்நிலையில் ஒன்றன் பாகமும் முழுமைக்குநிகராகலாம் என்று கணிதநூற் புலவர்கள் காட்டுவர். மெய்ம்மை என்பது அலகிறந்த வொருதத்துவம். இராமனது அம்பறுத்தூணியை, “மெய்ம்மைபோல் என்னும் தேய்வுறுத் தூணி” என்னக் கம்பர், முதன் முதன் அவன் போர்க்கோலம் பூண்டு கோசிகனுடன் புறப்பட்ட ஞான்றே குறித்திருக்கின்றார். ஆதலாலன்றோ, எண்ணிறந்த வானர சேனை, இராமனது தூணியினுள்ளிருக்கும் அம்பின் அளவாயிற்று. இப்படித் திரண்ட அவ்வானரச் சேனை,

தோயி னாழியோ ரேழுநீர் சுவறிவெண் டுகளாஞ்
சாயி னண்டமு மேருவு மொருங்குடன் சாயு
மேயின் மண்டல மெள்ளிட விடமின்றி யிரியுங்
காயின் வெங்கனற் கடவுளு மிரவியுங் கரியும்

[அமிழ்ந்து முழுகினால் எழுகடல்களும் நீர்வற்றிவெண் புழுதியாய்விடும். ஒருபுறஞ் சாய்ந்தால் அண்டங்களும் மேருமலையும் ஒருங்குசேர அந்தப்பக்கம் சாய்ந்துவிடும். எழுந்து திரிந்தால் இப்பூமியின் இடமானது எள் இடுவதற்கும் இடமில்லாமற் போய்விடும். கோபங்கொண்டால் கொடிய அக்கினிபகவானும் சூரியனும் தீய்ந்து கரியாகிவிடும்.]

எண்ணி னான்முக ரெழுபதி னாயிரர்க் கியலா
உண்ணி னண்டங்க ளோர்பிடி யுண்ணவு முதவா
கண்ணி னேக்குறிற் கண்ணுத லானையுங் கடக்கு
மண்ணின்மேல்வந்த வானரச் சேனையின்வரம்பே

[பூமியின்மீது திரண்ட அவ் வானரச் சேனையின் அளவானது, எழுபதினாயிரம் பிரமதேவர்களாலும் எண்ணிக் கணக்கிட இயலாது. இச்சேனைகள் உண்ணத் தொடங்கினால் இவ்வண்டங்க ளெல்லாவற்றையுஞ் சேர்த்தாலும் ஒரு பிடி அளவாக உண்ணவும் பற்றமாட்டா. தம் கண்களால் சீறிப்பார்ப்பதில் நெற்றிக்கண்ணுடைய சிவபிரானையும் ஜயிக்கும்]

ஒடிக்கு மேல்வட மேருவை வேரொடு மொடிக்கு
மிடிக்கு மேனெடு வானக முகட்டையு மிடிக்கும்
பிடிக்குமேற்பெருங் காற்றையுங்கூற்றையும் பிடிக்கும்
குடிக்கு மேற்கட லேழையுங் குடங்கையிற் குடிக்கும்

[ஒடிக்க வேண்டுமென்று எண்ணினால் வடக்கிலுள்ள மேரு மலையும் வேரோடு ஒடித்துவிடும். இடிக்கவேண்டுமென்று எண்ணினால் ஆகாயத்தின் முகட்டையும் இடித்துவிடும். பிடிக்க வேண்டுமென்று எண்ணினால் பெரிய காற்றையும் எமனையும் பிடித்துவிடும். குடிக்க வேண்டுமென்று எண்ணினால் எழு கடல்களையும் உள்ளங்கையில் முகந்து குடித்துவிடும்]

இன்னதோர் பெருந் திறமை சான்ற வானரப் படைகளைத் திரட்டிக்கொண்டு அறுபத்தேழுகோடி வானரத் தலைவர் வந்து சுக்கிரீவன் தாள்களை வணங்கி நின்றனர்.

அனைய தாகிய சேனைவந் திறுத்தலு மருக்கன்
றனைய னெய்தினிற் றயரதன் புதல்வனைச் சார்ந்தா
னினைய முன்னம்வந் தடைந்தது நின்பெருஞ் சேனை
வினையின் கூற்றுவ கண்டரு ணீயென விளம்பும்

[அத்தகைய சேனை வந்து தங்கிய அளவில், சூரிய குமாரனான சுக்கிரீவன், தயரதன் புத்திரனாகிய இராமனிடம் விரைவாகச் சென்று சேர்ந்து, நின்னை அடைந்தவர் தம் தீவினைகளை அழித்தருள்பவனே, நினைப்பதற்கு முன்னரே உனது பெரிய சேனை வந்து சேர்ந்தது; அதனைப் பார்த்தருள், என்று சொன்னான்]

தானே முன்னர்த் திருத்தியுளனேனும் அதனை உட்கொள மறுத்த சுக்கிரீவன் மீண்டும் "நின்சேனை" என்று குறிப்பது கண்ட இராமன் உவகையுடன் முகமலர்ந்தருளி, தானையைக் கண்ணுறும் வண்ணம் அங்கோர் நெடுவரைச் சிகரத்தின்கண் ஏறிநின்றனன். அன்னவன் கண்களின்முன் வானரப்பெரும் படை நெடுங்கடலெனப் படர்ந்தது. செல்லும் சேனையை இரவு பகல் இருபதுநாட்கள் பார்ப்பவரும் அதன் இடையைக் கண்டிலர்; அன்னதோர் சேனையை இராமன், தன்னயல் நின்ற தம்பிக்குக் காட்டி,

ஈசன் மேனியை யீரைந்து திசைகளை யீண்டிவ்
வாசில் சேனையை யைம்பெரும் பூதத்தை யறிவைப்
பேசும் பேச்சினைச்சமயங்கள் பிணக்குறும்பிணக்கை
வாச மாலையா யாவரே முடிவெண்ண வல்லார்

[வாசனை பொருந்திய மாலையை அணிந்தவனே, ஈசுவரனுடைய ரூபத்தையும், பத்துத்திக்குக்களையும், பஞ்சபூதங்களையும், அறிவையும், பேசுகின்ற பேச்சுக்களையும், மதங்கள் மாறுபடுகின்ற மாறுபாட்டையும், இங்குத் திரண்டுள்ள குற்றமற்ற இவ்வானர சேனையையும் எவர்தாம் முடிவுகாண வல்லவராவார்]

என்ன அப்படையின் ஈறிலாமையுடன் ஒப்புமை கூட்டுமாற்றால், ஈசன் மேனியேபோல் சமயப்பிணக்கும் முடிவற்றதாயிருக்கின்ற அமைதியை நயம்பட விளக்குகின்றான். ஆயிரம் ஆயிரம் பல்லாயிரம் வருடங்களாக மனிதர் ஏதோ பேசிக்கொண்டிருக்கின்றனர்; ஆயினும் இன்னும் முற்றுப் பெறவில்லை;பேசப் பேச மேலும் சில பேசத்தான் வேண்டியிருக்கின்றது. அமயம் நேர்ந்த விடத்து அந்தச் செய்தியையும், தன்னினம் முடித்தல் என்னும் உத்தியால் கம்பர் சேர்த்துக்கொண்டனர். கண்டனன் இலக்குவன்:

யாவ தெவ்வுல கத்தினி னீங்கிவர்க் கியற்ற
லாவ தாகுவ தரியதொன் றுளதென லாமே
தேவ தேவியைத் தேடுவ தென்பது சிறிதாற்
பாவந் தோற்றது தருமமே வென்றதிப் படையால்

[தேவனே, இங்குள்ள இவ்வானரவீரர்களுக்கு, எந்த உலகத்தில் செய்யவேண்டியது எதுவேயாயினும் அது எளிதிற் செய்து முடிவதாகும். சீதையைத் தேடித் தருதலென்பது இவர்களுக்கு மிகச் சிறியதொரு காரியமாகும். இந்தச் சேனையினால் பாவம் தோல்வியடைந்தது, தருமமே வெற்றி பெற்றது.]

என உவகையுடன் உரைத்து நின்றான். கடவுட் பணிக்கென்று உயிரிராசிகள் ஒருங்கு கூடுமிடமெல்லாம் உறஉற அறைகூவி நெடிது உரைக்கவல்லதாம், 'பாவந்தோற்றது தருமமே வென்றது" என்னுமிம், மாற்றம், மனிதகாரியத்திற்காக எவரெவர் எங்கெங்குச் சேரினும் அங்ஙனம் சேருமிடந்தோறும், தருமம் தோற்றது பாவமே வென்றது என்று நல்லோருள்ளம் பதறும்படியே யாவும் முடியும். அரசியல் கூட்டங்களும் வர்த்தகச் சங்கங்களும் வழக்கிற்கு வந்தறியாக் காலத்திருந்த இலக்குமணன் இப் பின்னைய பெற்றியை அறிந்திரான். ஆயினும், எம்பெருமான் இராகவனை இணைபிரியாச் செவ்வியால் முன்னதின் முறைமை அவனுக்கு இப்பொழுது முற்றினும் விளங்கிற்று. தேவ தேவியைத் தேடுவதென்பது சிறிது. கடவுளர்க்கு நம் உதவி வேண்டியதில்லை. ஆயினும் வேண்டுவார்போல் அவர் நிற்பதெல்லாம் அவருக்குப் பணிசெய்ய வோர் அமயம் நமக்கு அளிப்பதற்கே யன்றி வேறன்று. ஆழ்ந்து நோக்குங்கால் கடவுட்பணி யென்று செய்வதொன்றும் இன்றியமையாக் காரியம் ஆகமாட்டாது. அவருக்கு வேண்டியிராத இவ்வேலை, வீண்வேலையே; பயனுமில்லை என்னலாம்.எனினும் பயனிலதாகிய இப்பணியினாற்றான் மனிதன் புனிதனாகின்றான். மனிதர் தமக்குப் பயனுடையவைகளைச் செய்துகொள்ளும்படி சேரச்சேரப் பாவம் வெல்கின்றது; மற்று, கடவுளுக்குப் பயனுடைய வொன்றைச் செய்யச் சேர்கின்றோம் என்னும் எண்ணமுடன் கூடக்கூடத் தருமம் வெல்கின்றது. இருந்தேங்கி வாழ்வார் தம் இதயத்தில் பொறித்துக் கொள்ளவேண்டிய இரகசியம் இதுவே. இலக்குவனே இதனை இயம்புகின்றான்; இனி இதனைக் கேளாதார் கேளாதாரே.

---

## தமிழ் மொழியைக் குறித்த பழய குறிப்புக்கள்

[397-வது பக்கத் தொடர்ச்சி]

22. ஹோய் கரியோய் (Hoi kareoi). தாலமியால் கூறப்பட்ட கரையார் குமரிக்கும் கொற்கைக்கும் இடைப்பட்ட கடற்கரையில் வாழ்ந்து வந்தனர்; ஆதலினால் இந்த நாடு பெரிபுளுஸில் கண்ட பரளியாவின் கீழ்பாகமாகும். கரை என்ற தமிழ்ச் சொல் கடல் விளிம்பு (Coast) நீர்ப்பரப்பின் ஓரம் என்பதனைக் குறிக்கும். இது இல்லாமற்போதல், நீரினால் குறைந்துபோதல் என்ற பொருள்களைத்தரும் கரை என்னும் வினைப்பகுதி அடியாகப் பிறந்ததொரு பெயர்ச்சொல். இது கிரேக்க மொழியிலுள்ள பரளியா என்ற சொல்லை ஒத்த பொருளினையுடையது. திருநெல்வேலியைச் சார்ந்த கடற்கரைகளிற் பெரும் பகுதி கரை, கரைச்சுற்று என்று பேர்பெறும். இதன் வடக்கிலுள்ள செம்படவர்களைக் கரையார் என்பர். தாலமியால் கூறப்படும் முடிவிலுள்ள இரண்டு பெயர்களான கலிக்கரையஸ் (Kalai karias) பேரிங்கரை யென்பவை தமிழ்க் கரையையே குறிக்கும். பின்னது பெருங்கரை என்று எழுதப்பட்டிருந்தால் சுத்தத்தமிழ்மொழியாக விருக்கும். இதன் பொருள் நீர்நிலையைத்தாங்கும் பெரிய அணை என்றுபொருள்படும்.பெரும் என்பதிலுள்ள மகரம் ககரத்தின்முன் ஙகரமாகும் என்பது இலக்கணவிதி. பெரு என்னாது பெரும் என்பது இலக்கிய முறை.

23. ஹேஸோலேன் (Ho solen). இந்தப் பெயரால் தாலமிகூறுவது திருநெல்வேலிஜில்லாவிலுள்ள முக்கிய நதியான தாமிரபர்ணி ஆதல்வேண்டும். குமரிக்கும் காவிரிக்கும் இடையில் அவர்கூறிய யாறு இது

ஒன்றேயாகும். இதுவே முத்துவியாபாரத்துறையான கொற்கையில் கடலொடு கலப்பதாயுமுள்ளது. ஆயினும் இது எவ்வாறுஸோலென் எனக்கூறப்பட்டது என்று விவரிப்பது கடினமாகவிருக்கின்றது. கிரேக்க பாஷையில் இந்தச்சொல் ஓடுள்ள மீன் சங்கு என்று பொருள்படும். நாட்டினர் ஸோலென் என்பதனை ஒத்த ஒரு பெயரால் இந்த யாற்றை அழைத்ததாலோ அன்றிக் கொற்கையின் கடல் வாயிலில் அன்றும் இன்றும்முத்துச்சலாபமிடுதலாலோ இந்தப்பெயரை கிரேக்கர் வழங்கலாயினர் என்பது விசாரணைக் குரியது. இந்த யாற்றுக்கு எந்தக் காலத்திலும் வழங்கும் பெயர் தாமிரபர்ணி என்பது. இது ஒரு வகையிலும்ஸொலென்என்பதனோடு ஒற்றுமையுடையதாகக் காணப்படவில்லை. தமிழில் இது பொருனை என்று வழங்கும். இது பர்னி என்ற வடசொல்லின் தமிழாகும். தாமிர பர்னி என்ற சொல் சிவந்த அல்லது செம்பு நிறமுள்ள இலைகளையுடைய மரம் என்று பொருள்தரும். இது யாற்றுக்குஇடப்பட்டால் சிவந்த இலையை யொத்தது என்று பொருள்படும். இவ்வாறே இது மகாபாரதத்திற் கூறப்பட்டுளது; எனினும் அது தாலமி காலத்திற்கு முந்தியதோ என்பது வேறுவிஷயம். தாமிரபர்னி என்ற பெயர்இலங்கைத்தீவிற் கிட்ட பழம்பெயரொடு ஒருவாறு ஒற்றுமையுடையதாக விருக்கிறது. அதுபாலியில்தாம்பபண்ணி என்றும்கிரேக்கமொழியில்தப்ரபனே என்றும் வழங்கும்.கிரேக்கர் இலங்கைக்கு வழங்கிய பெயரை ஆற்றுக்கு இட்டிருந்தால் தப்ரபனே என்றுகூறியிருப்பர். சியலூர் என்பது தாமிரபர்ணியின்உபநதியென லாஸன் (Lassen) பிழைபடக் கருதுவர்.அதற்கும் ஸொலெனுக்கு ஒரு சம்பந்தமுமில்லை. இந்த உபநதி சிறிய ஆறு என்ற பொருள் தரும் சிற்றாறு-சித்தாறு-என்று வழங்குவதோடு இது ஒரு சிறிய பகுதியின் நீரை வடியச் செய்கிறது. தாமிரபர்ணியே பெரும் பகுதியான நிலப்பரப்பை வடியச் செய்வது. ஆதலினாலே லாஸன் நினைத்தது பெரிய தவறாகும்.

24. பெட்டிகோ (Bettico). தாலமி கூறுவதன் பிரகாரம் இதுஒருமலை. இந்தமலையில்சோலெனென்னும் தாமிரபர்ணியும் மேல்கடலில் விழும் பாரிஸ்[1] (Baris) என்ற ஆறும் அழிமுகம்[2] (Pseudostomos) - பெரியாறு - என்ற ஆறும் உற்பத்தியாகின்றன. இங்குக் குறிப்பிடப்பட்ட மலைத்தொடர்தென் தொடர்ச்சிமலையாகும். இது கோயம்புத்தூர் கணவா (பாலக்காடு)யிலிருந்து குமரிவரை தொடர்ந்து செல்லும் மலைத்தொடர். தாமிரபர்ணியானது அதன் முகத்துவாரத்திலிருந்தும், கிரேக்கர் மிகுதியாக வாணிபத்தின் பொருட்டு வந்து சென்ற கொற்கையிலிருந்தும் தெரியக்கூடியதான ஒரு கும்மட்டமான சிகரத்திலிருந்து உற்பத்தியாகிறது. கிரேக்கர் இந்த நாட்டினரைத் தாம் கண்ட தாமிரபர்ணி எங்கு உற்பத்தியாகிறதென்று கேட்டிருப்பின் நாட்டினர் இந்தச் சிகரத்தைக் காட்டியிருத்தல் கூடும். கிரேக்கரும் இந்த மலைத்தொடர் முழுமைக்கும் தாங் கேட்ட பெயரை இட்டு வழங்கியிருப்பர். இந்த மலையை ஆங்கிலர் அகஸ்தியர் என்று கூறுவர். அகஸ்திய மகரிஷி திராவிடரை நாகரிகமுடையவர்களாகச் செய்த பின்னர் இந்த மலையில் தங்கியதாக ஐதீகம். இந்த மலையின் உண்மைத் தமிழ்ப் பெயர் பொதிகை என்பது. இந்தச் சொல் மூடுகை, ஒளிந்து கொள்ளுகை என்று பொருள்படும். இதன் பக்கத்தில் மற்றொரு சிறுகுன்று இதே பேருடையதாக விருப்பதால் இதனைப் பெரிய பொதிகை என்றழைப்பர். இதன் பொருள் யாதாயினும் பெட்டிகோ என்பது சற்றேறக்குறைய பொதிகையை ஒத்துளது.

25. கொல்கை எம்போரியம் (Kolchoi emporion). இந்த ஊரைத் தாலமியும் பெரிபுளூஸ் ஆசிரியரும் பாண்டியனுக்குச்சொந்தமான முத்துச் சலாபமிடும் துறை எனக் கூறுவர். குமரிக்குக் கிழக்கில் கிரேக்கர் வந்து சென்ற முதற்பட்டினம் இதுவே. இது சொலென் ஆற்றுக்கு வடகரையிலுள்ளது. பெதிஞ்சர் அட்டவணையிற் கண்ட ஊர்களில் இதுவும் ஒன்று. அதனில் இந்த ஊர் கொல்கிஸ் இன்டோரம் (Colcis Indorum) என்று கூறப்பட்டுளது. மன்னார்குடாவை இந்த ஊரின் பெயரால் கோல்கிக்குடா என்று கிரேக்கர் கூறுவாராயினர். தமிழ்ப்பெயரும் கிரேக்கப் பெயரும் ஒருவாறு ஒற்றுமையுடையதே. இது தமிழில் கொல்க்கை என்று பேர்பெறும். இப்பொழுது புணர்ச்சி விதியினால் கொற்கை என்று சொன்னபோதிலும் மலையாளிகள் இந்த ஊரைக் கோல்க்கா வென்றே கூறுவர். திருச்செந்தூரிற் காணப்படும் தமிழ்க் கல்வெட்டு ஒன்றிலும் இது கோல்க்கை என்றே எழுதப்பட்டுளது. அந்தக் காலத்தில் சப்த சாஸ்திரம் வெகுவாய்த் திருந்தியிராதாகையால்கிரேக்கர் இதனைக்கொல்க்கை என்று சொல்லவே கேட்டிருப்பர். சேரசோழபாண்டியர்களாகிய சகோதரர் மூவரால் முதன் முதலாக அரசாங்க ஏற்பாடு இந்த ஊரிலேதான் உண்டாயிற்றென மக்கள் நன்கு அறிவர். பின்வந்த பாண்டியர்களுள் ஒருவனான அதிவீரராம பாண்டியன் வெற்றிவேற்கையில் தன்னைக் கொற்கையாளி என்று கூறிக்கொள்ளுகிறான். இந்த ஊர் இதுபொழுது கடற்கரையிலிருந்து மூன்று கட்டையளவு தொலை உள்நாட்டிலிருக்கிறது. ஆயினும் அது கடற்கரையிலிருந்ததற்குரிய அடையாளங்கள் பல காணப்படுகின்றன.

---

1. **பாரிஸ்.** பாலாயி என்று யாறு. இது மேற்குத் தொடர்ச்சிமலையில் தோன்றித் திருவாங்கூர் இராஜ்யத்தில் ஓடி மேல்கடலில் கலப்பது.

2. **அழிமுகம்.** பெரியாறு கடலொடு கலக்குமிடம். பெரியாற்றை அடைத்து வரும் நீரால் மதுரை ஜில்லாவில் பெரும்பகுதி சாகுபடி செய்யப்படுகிறது என்பது எல்லோரும் அறிந்தது. இந்தப் பெரியாறு மிகுந்த வெள்ளத்தைக்கொண்டு சென்று கடலில் கலக்கும்போது ஒரு இடம் விட்டு மற்றோரிடம் செல்லும். கோடையில் நீர் வற்றியபோது மேல்காற்றால் அந்தத் துறை தூர்ந்து போவதும் மறுமுறை வெள்ளத்தில் வேறொரு சங்கமம் தோன்றுவதும் யாறு கடலொடு கலக்குமிடத்திலுள்ளார் நன்கு அறிந்ததொரு செய்தி. அதனாலே கிரேக்கர் இதனை அழிமுகம் என்றனர்.

அன்றியும் முத்துச் சலாபம் குளிக்குந் துறைமுக மென அங்குள்ள மக்களிடை நடமாடும் கன்ன பரம் பரைச்செய்தியும் கேட்டேன். ஆற்றினால் இந்தத் துறைமுகம் மண்மேடிட்ட பின்னர் இதன் கிழக்கே ஒரு பட்டின முண்டாயிற்று. இது காயல் என்று நடுக்காலத்தில் பேருடையதாய்ச் சிறப்புற்றது. இது வே மார்க்கோ போலோ குறிக்கும் கேயல் (cael) ஆகும். காயலும்நாளடைவில்கப்பல் வியாபாரத்திற்கு உபயோகமற்றதாகவே, போர்த்துகேசியர் பரதவச் சேரியாக விருந்த ஒரு ஊரைத் பெரிதாக்கித் தூத்துக் குடி என்று பேரிட்டனர். இதுவே சோழமண்டலக் கரையில் கடைசித் துறைமுகம். இப்பொழுது முத் துச் சிப்பிகளே இந்தக் கடலிலிருந்து மறைந்துவிட் டன என்று சொல்ல மிகுதியும் வருத்தப்படுகிறேன். தூத்துக்குடி துறைமுக வியாபாரம் இப்பொழுது பருத்தி வியாபாரத்தி லிருக்கிறது. கொல்க்கையைக் கொற்கையெனக் குறித்தது மிக முக்கியமானது. இது நிச்சயப்படவே மற்றைய வற்றையும் நிதானிப்பது எளிதாகின்றது. கொல் என்ற பகுதி இறக்கச் செய் தல் என்று பொருள்படும். கை என்ற சொல் மனித உறுப்புக்களில் ஒன்று. இரண்டும் சேர்ந்து கோல்வுங் கை எனப் பொருள்படும், அதாவது இது போர்ப் படையைக் குறிக்கும். ஆகவே முருடராக மக்கள் வாழ்ந்த காலத்திலே அரசாங்க ஏற்பாடு ஆனதை இது குறிக்கும். இந்த இரண்டு தமிழ்ச் சொற்களும் சம்பந்தப்பட்டவரை அந்நாள் தொட்டு இந்நாள் வரை இந்தப் பாஷை ஒருமாறுபாடும் அடையவில்லை; இருசொல் இணைந்ததால் ஓசைநயம் (Euphony) உண்டாயிற்றே தவிர வேறுபாடு ஒன்றும் தோன்றவு மில்லை.

26. கோரு (Koru):—கோரு என்பது அர்காரிக் குடா (Argaric Gulf)—பாக்ஸ் ஜலசந்தி [1] வாயி லுள்ள ஒரு தீவு எனத்தாலமி கூறுவர். மற்றோரிடத் தில் அது ஒரு முனை என்பர். இவை இரண்டும் உண்மையே. கூர்மையாகச்செல்லும் ஒடுங்கிய நிலப் பரப்பையுடைய இராமேச்சுரமாக இதனைக் குறிப் போம். கால்மீர் முனைக்கும் இராமேச்சுரத்தீவுக்கும் இடையிலுள்ள குடாவை இராமதனுசு என்றும், இரண்டு முனையையும் கோடி என்றும் சொல்லுவது வழக்கம். இந்த இரண்டு கோடிகளுள் மிகச் சிறப்பு வாய்ந்தது இராமேச்சுரம். இந்தக்கோடியைக் கோரி என்றும் கோரு என்றும் கூறுவது இயல்பு. இது மேலே கூறியாங்கு மாறுமென்பதை எண்ணில் மிகப் பெரியதான கோடி என்பது ஆங்கிலத்தில் குரோர் (Crore) என்று வழங்குவதுகொண்டு தெளியலாம். கிரேக்கர் கூறிய பெயர் இன்னதென அறியாத போர் த்துகேசியர் இந்தக்கோடியை ராமன கோரு என்று அழைத்தது மிக்க ஆச்சரியத்தை விளக்கும்.

27. கள்ளிகிக்கோன் (Kalligikon):-இராமேச் சுரத்திலுள்ள ஒடுங்கிய முனையான கோருவைத் தா லமி கள்ளிகிக்கோன் என்றுங்கூறுவர். இவர் இத னைப் பிழைபடக்கூறுகிறார் என்று எண்ணவேண்டி யிருக்கிறது. கள்ளிகிக்கோன் என்பது பிளினி கூறிய கலிங்கோன் (Kallingkon) என்பதோடு ஒற்றுமை யுடையது. இது காலிமீர் முனை [1] யாக இருக்கவேண் டும் என்று எனக்குத் தோற்றுகிறது. வில்லின் இரு முனைகளாகக் கருதப்படும் இரண்டு கோடிகள் உண் மையாலும், ஒருகோடி காலிமீர் முனையாகையாலும் கோரு என்பதும் கள்ளிக்கோன் என்பதும் ஒன்று எனத் தாலமியை நினைக்கும்படி செய்ததுபோலும். காலிமீர் முனையின் தமிழ்ப்பெயர் கள்ளிமேடு [2]. கிரே க்கச்சொல் கல்லியும் தமிழ்க் கள்ளியும் ஒரு பொரு ளையே குறிக்குமெனத் தோற்றுகிறது.

28. கோலிஸ் [3] (Kolis):-தாலமிக்கு முந்திய கிரோ க்க உரோம பூகோள நூல்களில் கோலிஸ் என்பது சிறப்பாகக் கூறப்பட்டுளது. அது இலங்கைக்கு 7 நாள் பயணத்தில் தென் இந்தியாவிலுள்ள ஒரு இடமென்றும், அந்நாட்டினர் கோலியக்காய் (ko-

1. பாக்ஸ் ஜலசந்தி (Palk strait of Bay) இரண்டு பெரும் நீர்ப்பிரிவுகளைச் சேர்க்கும் ஆறுபோன்ற சிறிய நீரோட்டத்திற்கு ஜலசந்தி (Strait) என்று பெயர். கடல் வேதாரணியம் கோடிக்கரையில் வடக்குத் தெற் கிலோடும், அது நேர் கோணமாக மேற்கே திரும்புவ தைத் தவிர வேறுபாடு ஒன்று மில்லை. ஆனால் கோடியி லிருந்து இலங்கையின் வடபாகமான யாழ்ப்பாணத் தைச் சார்ந்த பருத்தித்துறை காங்கேசன்துறை என்ற ஊர்கள் 36 கட்டை தொலையிலுள்ளன. தூத்துக்குடித் துறைமுகமும் விலோன் போட்மெயிலும் உண்டாவ தற்குமுன் தபால் முழுமையும் கோடிக்கரையான காலி மீர் முனைக்குத் தோணிவழியாக வந்தே வடக்கே சென் றன.

1. காலிமீர் முனை (Point Calimere):—வேதாரணியம் கோடிக்கரை.

2. கள்ளிமேடு. இது வேதாரணியத்திற்கு மேற்கே 6 கட்டை தொலைவிலுள்ளது. கள்ளிமேட்டுக்கும் காலிமீர் முனைக்கும் சம்பந்தம் இருப்பதாகத்தெரியவில்லை. கோடி யிலுள்ள கோயில் கோடிக் குழகர் என்று கூறப்படும். இது கடலுக்கு இரண்டு பர்லாங்குக்குள் இருக்கிறது.

3. கோலிஸ்:—இதனைச் சோலிஸ் என்று பம்போனி யர் மேலா கூறுவது மிக ஒற்றுமையுடையதேயாகும். ஐரோப்பியர் c என்ற எழுத்தை k என்று உச்சரிப்பது இயற்கை. அதனாலேயே சோழமண்டலம் கோரமண் டல் ஆகிவிட்டது. இதனை டாக்டர் கால்டுவெல்லும் கூறு வர். மற்றும் காவிரிப்பூம்பட்டினம், நாகபட்டினம், கோ டிக்கரை இந்த ஊர்களிலிருந்து இலங்கைத் தீவுக்குக் காற்று உண்டானால் பன்னிரண்டு மணிநேரத்தில் செல்ல லாம். காற்று இல்லாவிட்டால் இரண்டு நாளும் செல் லும். இஃதன்றிப் பயணம் செல்லும் தூரத்தையும் நேரம் பொறுத்தது. மேலே கூறிய துறைமுகங்களிலிருந்து பயணமாகிக் கரையோரமாகச் சென்றால் இருபதுநாளும் செல்லலாம். நடுக்கடலிற் புகுந்து குறுக்கே சென்று பருத் தித்துறை, காங்கயன் துறை சென்று, திருக்கோணமலை போக வேண்டுமானால் நான்கு நாள் செல்லுவது அதிசய மல்ல. இராமேச்சுரம் இலங்கைக்குச் சமீபமாயினும் இங்கு க்கிரேக்கர் கூறியது சோழரது பட்டினங்களில் ஒன்றே யாகும். சீன யாத்திரிகர் பலர் சீனாவிலிருந்து மலேய நாடு வந்து கடலின் குறுக்கே நாகப்பட்டினம் வேந்த இலங்கை சென்றதாகச் சீன யாத்திரிகரது குறிப்புகள் காணப்படுகின்றன.

liakoi) எனப்படுவர் என்றும் முதன் முதலாக ஸ்டிராபோவில் காணப்படுகிறது. ஸ்டிராபோ தமக்கு மூன்று நூற்றாண்டு முந்திய ஒனிஸ்கிரிடஸ் என்பவரைப் பின்பற்றிக் கூறுவதாகத் தெரிகிறது. அவர் இந்த இடத்திலிருந்து இலங்கை 20 நாட் பயணமென்பர். பம்பொனியஸ் மெலா இதனைக் கோலிஸ் (Colis) என்பர். இந்தப் பயணத்தை 4 நாட்களுக்குச் சுருக்கி இதனைக்கோலியகம் (Coliacum) என்பர் பிளினி. அதனோடு இலங்கைக்குச் சமீபத்திலுள்ள ஒரு முனையென்றும், இதற்கும் இலங்கைக்கும் நடுவில் ஒரு ஆழமற்ற பவளக்கடல் உண்டென்றும் விவரிப்பர். பிறரைக் காட்டிலும் கோலிஸைக்குறித்து அதிகமாக எழுதும் டயோனிஸிஸ் பெரிகிடிஸ் என்பார் கவித்துவமுறையாக இதனை ஸிந்துவுக்குச் சமீபத்திலுள்ள அயோர்னிஸ் (Aornis) என்று வர்ணிப்பதோடு இலங்கையைக் கோலிஸிலிருந்துவந்த பெயராக எண்ணிக் கோலியாஸ்என்றொரு பெயரும் இட்டழைப்பர். தாலமியில் கோலிஸ் என்பது மறைய கோரு என்பது தோன்றிற்று. ஆகவே கோலிஸ், கோரு என்பன ஒன்றே என்றும், இவை இலங்கைக்குச் சமீபமாக இருக்கும் இராமேச்சுரத்தையே குறிக்குமென்றும் நான் கருதுகிறேன். இப்பொழுதுள்ள பூகோள அறிவைக் கொண்டு தென் இந்தியாவின் கடைக் கோடி குமரி எனக் கூற முற்படுவராயினும் தாலமி காலத்திற்கு முற்பட்டதான பெதிஞ்சர் அட்டவணையில் நாம்கூறும்குமரிமுனை முனையாக இருந்ததில்லை. அந்தக்காலத்தில் தென்முனையாக இருந்தது. இராமேச்சுரம். இங்கிருந்தே இலங்கைக்குச் செல்வது எளிதாக விருந்தது. கோரிஸ் என்பது கோருவின் மரூஉ என நான் கருதவில்லை. அதற்கு மாறாக இரண்டு சொற்களும் கோடி என்ற ஒன்றையே குறிப்பனவாகக் கருதுகிறேன். அதாவது அர்கரிக் குடாவின் முனைகளான காலிமீர் முனையையும் இராமேச்சுரத்தையும் அது குறிப்பதாகும். பம்பொனிஸ்மெலா இதனை ஒரு விட்டம் (Angulus) என்றார். அதுவன்றி அவர் இது குடாவை மாத்திரம் குறிக்காது இந்திய நாட்டையும் குறிக்குமென்றார். மேலும் அவர் தென்கரையானது கீழ்பாகத்தில் அதனோடு முடிந்ததாகவும், அது ஸிந்துநதியிலிருந்து இந்த இடம்வரை ஒரே நேர்கோடாக வந்ததாகவும் கூறினார். கோலிஸ் என்றசொல் கோரு என்பதைக் காட்டிலும் கோடிக்கு ஒற்றுமையுடையதாகத் தெரிகிறது. வடமொழி ட தமிழ் ழ, ள எழுத்துக்களைக் குறிக்குமென முன்னரே கூறியுள்ளோம்.

29. மல்லி, கோரம், மான்ஸ் மலையஸ் (Malli, Quorum, Mons Maleus);:—பிளினி. இதுகலிங்க நாட்டிற்கு வடக்கிலிருந்ததாகவும், கஞ்சத்திலுள்ள மஹேந்திர மலை எனவும் கன்னிங்காம் தளபதி கூறுவர். பிளினியில் கூறியபடி இந்தியாவிலுள்ள இடங்களை நிர்ணயிப்பது மிகக் கடினமாக விருக்கிறது. மான்ஸ் மலையஸ் என்பது எங்கிருந்தபோதிலும் அந்தப் பெயர் எல்லோருமறிந்த தமிழ்ச் சொல்லேயாகும். தமிழ்ச் சொல்லான மலையர், ராஜமகால் பிரதேசத்திலுள்ள மலையர், மலேர், என்பவைபோல மலையஸ் என்ற சொல்லிலிருந்தே மக்கள் பெயரும் தோன்றியிருத்தல் கூடும்.

---

# சூரியன்

[394-வது பக்கத் தொடர்ச்சி]

சப்தரிஷி மண்டலம்:—இந்தச் சூரிய இராசி பன்னிரண்டையும் விட்டுச் சற்று வடக்கே நோக்குவோமாயின், துருவனுக்கு அணுக்கராய்ச் சப்தரிஷிகள் விளங்குகின்றனர். இம்மண்டலம், ஒரு கலப்பை போலத் தோன்றும். அக்கலப்பையின் கைப்பிடியாக மூன்று நக்ஷத்திரங்கள் உள்ளன. அவற்றில் நடுவே இருப்பதே வசிஷ்ட நக்ஷத்திரமாம். அதற்கருகே, அதனை இணைபிரியாமல் அதனோடு இரட்டைநக்ஷத்திரமாய் விளங்குவது அருந்ததியாகும். திருமணத்தில், அருந்ததி காட்டுதல் என்ற சடங்கொன்று உண்டு.

தெற்கு மண்டலங்கள்:—வட துருவத்தைவிட்டுத் தென் துருவத்தை நோக்குவோமாயின், அங்கு நீண்ட வலம்புரிச் சங்குபோல, திருச்சங்கு (Southern cross) தோன்றுகிறான். இவன் அரிச்சந்திரன் தந்தையாம். தேகத்துடன் சுவர்க்கம் செல்ல முயன்றபோது, இவனுடைய குருவாகிய வசிஷ்டர், இவனை நீசனாகச் சபித்துவிட்டார். சமதரிசனப் பண்டிதராகிய விசுவாமித்திருடைய தவமகிமையால், இந்திரலோகம் சென்றான்; அங்கிருந்து, தேவர்கள், இவனைச் சண்டாளன் எனக் கீழே தள்ளவே, இவன், உருண்டு விழுந்து ஓலமிட்டு வந்தான். விஸ்வாமித்திரர் இவனை விழாதபடி தடுத்து, அவன் இருந்த இடத்திலேயே, ஒரு சுவர்க்கத்தைச் சிருஷ்டித்து, அதனிலே அவனை நிலைநிறுத்தினாராம். இவ்வாறு சிருஷ்டித்த உலகமே திரிசங்கு சொர்க்கமாகும் என்று, புராணம் கூறுகின்றது. திருச்சங்கு, தென்கிழக்கில் உதயமாகித் தென்மேற்கில் அஸ்தமிக்கும். இஃது நான்கு நக்ஷத்திரங்களால் அமைந்துள்ளது. இம்மண்டலம் தலைகீழாகச் சுற்றித் திரிதலின், இதனைத் திரிசங்கு என்றும் கூறலாம். இதற்குக் கிழக்கே, இரண்டு நக்ஷத்திரங்கள் இவ்வறே திரிதலின், அவற்றைத் திரிசக்கரம் என்பர். திரிசக்கரத்தை முன்காலாகக்கொண்டு, மகிஷாசுரமண்டலம் (Centaurus) இவற்றிற்கு மேலே, பல நக்ஷத்திரங்களோடும் சேர்ந்தொன்றாய் விளங்கி, அநுஷம் கேட்டை மூலம் என்னும் இவைகள் சேர்ந்து விளங்குகின்ற தேள் மண்டலத்திற்கு (Scorpio) அடுத்தாற்போலத் தெற்கில், தோன்றுகிறது. திரிசங்குவின் மேற்கில், அதனைப் போன்ற பெரிய நான்கு நக்ஷத்திரங்கள் தோன்றுகின்றன. இவற்றின் நின்றும், திரிசங்குவை வேறு பிரித்தறியலாம். இவற்றோடு அருகில் உள்ள நக்ஷத்திரமும் சேர்ந்து கப்பல் மண்டலம் ஆகின்றன (Argo). இதனில் தென்மேற்காக ஒரு பிரகாச

மான நக்ஷத்திரம் தோன்றுகிறது. அதனையே அகஸ்திய நக்ஷத்திரம் (Canopus) என்று முன் காட்டிய பரிபாடல் கூறுகின்றது. அங்கே, அகஸ்தியர் இருத்தலின், மேனாட்டார் கூறும் கப்பல்மண்டலத்தை, மலையமண்டலம் அல்லது பொதிகைமண்டலம் என்றும்வழங்கலாம். இது "கொறுகலப்பை" என்று உலகினர் வழங்கும் காலபுருஷ மண்டலத்திற்கு (Orion) சற்றுத் தெற்கே இருக்கின்றது. பார்வதி தேவியாருக்குத் திருமணம் நடந்தபோது, இமயமலையில், எல்லோரும் வந்திருந்ததால், வடதிசை தாழ்ந்து, தென் திசை யுயர்ந்து, உலகம், தலைகவிழ்ந்தது போல், தத்தளிக்க, அதனைச் சமநிலைப் படுத்துவதற்குத் தக்க எடையுடையவர் அகஸ்தியரே, என்று கருதிச் சிவபெருமான், இவரைப் பொதியமலைக்கு அனுப்பினாராதலின், அந்தத்தெற்கெல்லையில், இவர் விளங்குகிறார் என்பது புராணக் கூற்று.

நக்ஷத்திர ஓட்டம்:—சூரியோதயமும், சூரியாஸ்தமனமும்போல, நக்ஷத்திரோதயமும் நக்ஷத்திராஸ்தமனமும், பூமியின் சுழற்சிகாரணமாகத் தோன்றும் கண்மயக்கேயாம். புகைவண்டியிற் செல்லும்போது நிலையாக நிற்கும் மரங்களும், தூண்களும் எதிரே ஓடிவருவனபோலத் தோன்றுகின்ற கண்மயக்கோடு ஒப்பானதாகும் இது. சூரியனே நிலைபெற்றதென்றும், கோள்களே அதனைச் சுற்றிவருகின்றன என்றும் கொள்வதுபோல, பெரிய சூரியர்களாகிய நக்ஷத்திரங்கள் யாவும், தத்தம் நிலையிலேயே நின்று நிலைபெறுகின்றன என்றே கொள்ளுதல்வேண்டும். சூரியோதயாஸ்தமனங்களைக் கண்டு, பூமி தன்னைத்தான் சுற்றிவரும் வேகத்தைக் கண்டறிவதுபோல, நக்ஷத்திர ஓட்டங்களைக் கண்டு, நம்முடைய சூரிய குடும்பத்தின் வேகத்தையும் கண்டறிகின்றனர். சூரிய குடும்பத்தின் வேகம், ஒரு வினாடியில் 20.8 (Kilometer) கிலோமீடர் என்று சிலர் கணக்கிட்டுள்ளார்கள். இவ்வாறே, 1000 வருடத்திற்கு ஒரு முறை, ஒரு துருவன் மாறி, வேறொரு துருவன் வருகின்றான் என்று ககோள சாஸ்திரிகள் கூறுவதும், பூமியின் சுழற்சியால் தோன்றும் கண்மயக்கேயாம். சுழன்று வரும் பூமியில் வாழும் நாம், ஆகாயத்தில் நிலவுவனவற்றில், நிலையானவை எவை என்று நிர்ணயிக்கப் பலவகையான தடைகள் உள்ளன. இத்தடைகளை எல்லாம் நீக்கி, இந்நூற்றாண்டில், மிக அருமையான வகைகளில், ஆராய்ச்சி நடந்து வருவதால், இதுகாறும் நிலையானவை என்றுஎல்லோரும்எண்ணிவந்த நக்ஷத்திரங்களும், ஆகாயத்திலே, ஒரு முறையைப் பின்பற்றி, ஓடிக்கொண்டே இருக்கின்றன என்று கண்டுபிடித்துள்ளார்கள். ஒரு பொருளும் இவ்வண்டத்தில் இயக்கமற்று இருப்பதில்லை. ஒரு அணுவுக்குள்ளும், சிற்றணுக்கள் (Electron) சுழன்று வருவனபோல, பிரமாண்ட சராசரத்திலும், மகத்துக்கு மகத்தான உருவங்களும் ஓடிக்கொண்டேஇருக்கின்றன.

அதல விதலமுத லந்தத் தலங்களென
அவனியென அமரர் அண்டத் தகண்டமென
அகில சலதியென எண்டிக்குள் விண்டுவென-அங்கிபாது
அமுத கதிர்களென அந்தித் தமந்த்ரமென
அறையு மறையென அருந்தத்து வங்களென
அணுவிலணுவெனநிறைந்திட்டு நின்றொருசம்பிரதாயம்.

—திருப்புகழ்

இவ்வாறு விளங்குகிறது. இந்த நக்ஷத்திரங்கள் இருவேறு வேகநிலை உடையனவாகத் தோன்றுகின்றன; வாம்; இரண்டு வெள்ளம் ஒன்றின்மேலொன்றாய்ப் புரள்வதுபோல ஓடுகின்றனவாம். எந்த இடத்திற் பார்த்தாலும், இவ்விரண்டு வெள்ளத்திலகப்பட்ட நக்ஷத்திரங்களும், கலந்து தோன்றுகின்றனவாம். சர்ப்பாபரணமண்டலத்தில் (Ophiuchus) தன் முடியை வைத்து ஒரு வெள்ளம் புரளுகின்றது; மற்றொன்று பூனை மண்டலத்தே (Lynx) முடியை வைத்துப்புரள்கிறது; முன்னையது பின்னையதைவிட ஒன்றரை மடங்கு வேகமாக ஓடுகிறதாம். இரண்டு வேறு அண்டங்கள், ஒன்றை ஒன்று நாடி வந்து, ஒருங்கியைகின்றனவோ ? இவ்வாறு, இவை, ஒருங்கே, ஒரு வெள்ளமாகவோ, இருவெள்ள மாகவோ, ஓடுவதன்றி, சிலநக்ஷத்திரங்கள், கூட்டமாகச்சுழன்று வரவும் காண்கிறோம். பொது ஓட்டத்திலும் வேறாகிய சிறப் போட்டமும் உண்டு. இரட்டை நக்ஷத்திரங்களைப்பற்றி, முன்னரே, கூறியுள்ளோம். சப்தரிஷிகள் ஐந்தும் இரண்டு மாகச் சுற்றுவதையும், திரிசங்கும் திரிசக்கரமும், தனித்தனியே, சுற்றிவருவதையும், முன்னரே, கண்டோம். மிக்க தூரத்தில் உள்ளனவற்றோடும், ஒற்றுமை யுடையனவாக, நக்ஷத்திரங்கள் சுற்றுகின்றனவாம். சப்தரிஷி மண்டலம், மிக்க தூரத்தே, தெற்கில் இருக்கும் கத்திரி நக்ஷத்திரத்தோடு, ஒற்றுமை யுடையதாகி, ஒருங்கே சுழல்கின்றதாம். கார்த்திகைக்கும் (Pleiades) உரோஹிணிக்கும் (Aldebaran) நடுவுள்ள 40-க்கு மேற்பட்ட உடுக்கள் ஒரே வேகமாய், நேருக்கு நேர் சுற்றுகின்றனவாம். காலபுருஷமண்டலத்தில் உள்ளவையும், பர்சியஸ்மண்டலத்தில்உள்ளவையும், இவ்வாறு தனித்தனிக் குடும்பங்களாக, விளக்குகின்றனவாம்,

சூரிய நக்ஷத்திரம்:—நமது சூரியனை ஒரு நக்ஷத்திரம் என்று கொண்டோமன்றோ ? தொன்றுதொட்டு நக்ஷத்திரங்களைக் கூட்டம் கூட்டமாக வகுத்துள்ளனவற்றை ஆராய்ந்தோம். நமதுசூரியன், எந்தக்கூட்டத்தைக் சார்ந்தவன் என ஆராய்தல் வேண்டும். தூரதிருஷ்டிக் கருவியினாலும், ஒளியுடைக்கும் கருவிகளாலும், நமது சூரியனை, நக்ஷத்திரங்களோடு, சேர்த்துப் பரிசோதித்துப் பார்க்கையில், சூரியன் தனியாகவே நிற்கின்றான். ஆயினும், இவன் பால்வழியைச் சேர்ந்தவன் என்று சிலர் கொள்வர். அநேக நக்ஷத்திரங்களைப் பார்க்கிலும், உஷ்ணத்திலும் வெளிச்சத்திலும் தாழ்ந்திருப்பினும், நமக்கு மிக அருகிலிருக்கும் பொருள்கள் யாவற்றிற்கும், மேலானவனாகவே விளங்குகிறான். இவற்றை எல்லாம், நாம் ஆராயுங்காலையில், நாம் வசிக்கும் பூமியும், அதனோடு சேர்ந்திருக்கும் மற்றைய கிரகங்களும், இவற்றிற்குத் தலைமைவகிக்கும் கதிரவனும், இப்பெரிய அண்ட சிருஷ்டியில் ஒரு சிறு அணுவென்றே சொல்லவேண்டும்.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றினுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் தெரியின்.

—திருவாசகம்.

அறிதோ றறியாமை கண்டற்று:—சூரிய ஆராய்ச்சியில், கண்ணும் கருத்துமாகப் பல நூற்றாண்டுகளாகப் பல பெருமக்கள் உழைத்துவந்திருந்தும், சூரியப்புள்ளி, வெண்பரப்பு, சுடர்க்கொழுந்து, கிரீடம் முதலியவற்றைப்பற்றிப் பலவுண்மைகளை எல்லாம் நாம் அறிந்திருந்தும், ஒரு தலைமுறையாக, ஒளியுடைக்கும் கருவியைக்கொண்டு சூரியனது ஒளியை மிக நுட்பமாக உற்றுநோக்கி யாராய்ந்து எத்தனையோ பல அற்புத சூக்ஷ்ம விவரங்கள் இரஸமாக வெளியாகி யிருந்தும், 'அப்பேரொளியின் சடப்பொருள்நிலை யாது' எனக்கேட்பார் எதிர், 'ஒன்றும் தெரியாது' என்றே கூறவேண்டி யிருக்கிறது. சூரியனைப் பற்றிய கொள்கைகளுக்கு அளவே இல்லை. அதனுடைய உஷ்ணத்தைப்பற்றிய கொள்கைகளும் மிகப் பல. அது தோன்றியது எங்ஙனம்? அளவில்லாத உஷ்ணத்தை, வெளியே கான்றுகொண்டிருந்தும், குளிர்ந்து போகாமல், உஷ்ண நிலையைக் காப்பாற்றுவது எங்ஙனம்? இத்தகைய கேள்விக்கு விடையளிக்க முடியாமல் நமது மனம் திகைத்து நிற்கின்றது.

சுருதிமறைக ளிருநாலு திசையிலதிபர் முனிவோர்கள்,
  துகளிலிருடி யெழுபேர்கள்—சுடர்மூவர்,
சொலவில் முடிவில் வெகுரூப பகுதிபுருடர் நவநாதர்,
  தொலைவிலுடுவி னுலகோர்கள்—மறையோர்கள்,
அரியசமய மொருகோடி, அமரர் சரணம் சதகோடி,
  அரியுமயனு மொருகோடி—இவர்கூடி,
அறிய அறிய அறியாத, அடிகளறிய அறியேனும்
  அறிவுளறியு மறிவூற—அருள்வாயே.

—திருப்புகழ்

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[389-வது பக்கத் தொடர்ச்சி]

### 7-ம் பத்து 10-ம் தசகம்.

#### 1-ம் பாசுரம்

இன்பம் பயக்க எழில்மலர்
  மாதரும் தானும் இவ்வேழுலகை
இன்பம் பயக்க இனிது வீற்றிருந்து
  ஆள்கின்ற எங்கள் பிரான்
அன்புற்று அமர்ந் துறைகின்ற அணிபொழில்
  சூழ்திரு வாறன்விளை
அன்புற் றமர்ந்து வலஞ்செய்து கைதொழு
  நாள்களு மாகுங்கொலோ.

அவதாரிகை:—இவ்வேழாம் பத்து 6-ம் தசகமாகிய "பாமரு மூவுலக"த்தில் ஆழ்வாரின் தேஹப்பிரதிபந்தத்தைத் தவிர்த்துத் தரவில்லையென்று அலற்றினதைப் படித்தோம். பிறகு தாம் "மாயாவண்ணம்" பகவான் தன் விசித்திர சக்தியைக்காட்டிக்கொடுத்து ஆழ்வார் மனதை ஒருவாறு தேற்றியதாக அருளிச்செய்ததையும் அறிந்தே அதன் பிறகு இவ்வுலகத்தில் ஆழ்வாரை வைத்திருப்பது தமக்கும் உலகருக்கும் இன்பம் பயக்கக் கவிபாடுவதற்காக வென்று தோற்றிய பின்னர்த் தன்னைப்போன்ற அவ்வஸ்துவைப் பரமகவியாகவாக்கித் தன்னைத்தானேபாடுவித்துக் கொண்ட பரமோதார ஸ்வபாவத்தையும் ஆச்சரிய விசித்திர சக்தியையும் அனுசந்தித்து ஆழ்வார் மனக்கவலையை மாற்றிக்கொண்டதைச் சென்ற தசகத்தில் பரக்கப் பேசியதையும் கண்டோம். இங்கு இத் திருவாய்மொழி பாடியதை இனிது கேட்டு வேறு வியாபாரமில்லாமல் போக்கியமாக ஓர் ஸ்தலத்தில் வீறு தோன்றியிருந்து அநுபவிக்க இடம் திருவாறன்விளை யென்று ஆழ்வாருக்குத் தோற்ற அவ்விடம் சென்று பகவானை ஸேவை செய்து அடிமை செய்யக் கருதுகிறார்.

உரை:—இன்பம் பயக்க எழில் மலர் மாதரும் இனிதின் வீற்றிருந்து-ஸ்ரீ வைகுண்டத்தில் நித்திய ஸூரிகள் எப்போழ்தும் ஆநந்தாநுபவஞ் செய்ய, எழில்மலர்மாது-விளங்கித்தோன்றும்தாமரைப்பூவின் மேல் எழுந்தருளியிருக்கும் இலக்குமியும் தானும் ஒன்றுகூடி ஆதிசேஷனை ஸிம்மாஸனத்தில் ஏறி வீறு தோன்ற விருந்து-இவ்வேழுலகை இன்பம் பயக்க ஆள்கின்ற-இந்த ஏழு உலகத்தையும் மகிழ்விக்க, தாய் தந்தையாய், பரமதயாகுணத்துடன் ஆள்கின்ற, எங்கள் பிரான் அன்புற்று அமர்ந்து உறைகின்ற - தாம்வைகுண்டத்தில் வீற்றிருக்குமாப்போலே உலகருக்கும் பரம தயாளுவான ஸ்ரீயப்பதி ஸேவை அளிக்க நித்தியவாசஞ் செய்கிற பொழில்களால் ரமணீயமாயலங்கரிக்கப்பட்ட திருவாறன்விளைத்திருக்கோவிலைப் பிரதக்ஷணம் செய்து தொழுவதற்கு வேளையும் வருமோ வென்கிறார்.

I. விசேஷக் குறிப்பு:—இவ்வாழ்வார் திருக்குருகூரை விட்டு வேறு திருப்பதிக்குப் போய்த் தொழவில்லை யென்று ஐதீகம்: இதற்கிணங்க திருநகரிக்குச் சமீபத்திலுள்ள ஒன்பது திருப்பதிகளுள்ள பெருமாள்கள் ஆழ்வாருக்கு ஸேவை கொடுக்க ஆழ்வார் உறையும் திருப்பதிக்கே ஏகி அருள்பாடு ஆகின்றதை நாளைக்கும் காணலாம். இதற்கு வேறு சான்றுகள் யாமெழுதிய உபோத்காதத்தில் விபரமாய் வரைந்துள்ளோம். அங்குக் கண்டுகொள்க. 'நாள்களுமாகுங்கொல்?" என்று இப்பாசுரத்தில் கூறுவது இக்காரணம் பற்றியே ஆகும்.

II. இப்பாசுரத்தில் "ஏழுலகத்தை" ஸ்ரீயப்பதி ஆள்கின்றாரென்றது "பூ" "புவர்" "சுவர்" முதலான ஏழுலகத்தைக் குறித்ததல்ல. மேல் கண்டபடி மேல் ஏழ் உலகத்தைக்குறித்ததாகக் கொண்டால் கீழ் ஏழ் பாதாள லோகங்களை ஆளவில்லை யென்று ஏற்படும். வேதாந்தத்தில் "ஏழுலகம்" என்று எல்லா மண்டலங்களடங்கிய ஸர்வ ஸூக்ஷ்ம ஸ்தூல சிருஷ்டி அகப்படவென்று நாம் பொருள்கொள்ளவேண்டும். ஸூக்ஷ்ம சேதநங்கள் நாலு திருகுணங்கள் கலந்த பூதசூக்ஷமங்கள், காலம், சுத்த ஸதவம் (பிருகிருதி கலப்பில்லாத தத்வங்கள்) தாம்பூத ஞானம் (சேதநர்கள் அநுபவிக்கக்கூடிய Functioning-inteligence) சேதநர்கள் வகைப்பாடு மூன்று, நித்தியர்கள், முக்தர்கள், பக்தர்கள் ஆக ஏழு உலகம் பார்க்கக் கூடியவை. அதாவது ஞானத்தால் பகுத்தறியக் கூடிய ஏழு பதார்த்தங்கள்.

---

2-ம் பாசுரம்

ஆகுங்கொல் ஐயமொன் றின்றி
அகலிட முற்றவும் ஈரடியே
ஆகும் பரிசுநிமிர்ந்த திருக்குற
ளப்பன் அமர்ந் துறையும்
மாகம் திகழ்கொடி மாடங்கள்
நீடுமதிள் திருவாறன்விளை
மாகந்த நீர்கொண்டு தூவிவலஞ்
செய்து கைதொழக் கூடுங்கொலோ ?

குறிப்பு:—இப்பாசுரத்திலும் ஆறன்விளை திருக்கோவிலில் நீர் கந்தம் பூக்கள் முதலான பூஜா திரவியங்களை முறைப்படி ஈந்து பூஜிக்கக்கூடுமோ வென்கிறார்.

பதக்குறிப்புக்கள்:—ஐயம் ஒன்று இன்றி-மகாபலியின் அரங்கத்தில் பெருமாள் குறளாய்ப்பிரம்மசாரி வடிவமெடுத்துச் சக்கரவர்த்தியை மூவடிதாவென்று யாசித்தபோது சூழ்ந்திருந்த தேவர்கள் இக்குறளா தேவேந்திரனுக்குத் திருலோகாதிபத்தியத்தை மீட்டுக் கொடுக்கப்போவ தென்று ஐயப்பட்டிருந்ததை இரண்டு அடியால் எல்லா வுலகங்களையும் கவர்ந்து கொள்ளும் சாமர்த்தியத்தைக் காட்டின "பரிசு" என்று புகழ்கிறார். கொடிமாடங்கள் ஆழ்வார் திருவாய்மொழியைப் பகவான் திருச்செவிசார்த்திக் கேட்கப் போகின்றாரென்று ஆறன்விளை உற்சாகங் கொண்டு உற்சவ வைபவம் கொண்டதாகத் திருவுள்ளப்பட்டு உரைக்கிறபடி.

3-ம் பாசுரம்

கூடுங்கொல் வைகலும் கோவிந்தனை
மதுசூதனனைக் கோளரியை
ஆடும் பறவை மிசைக்கண்டு
கைதொழுதன்றி அவனுறையும்
பாடும் பெரும்புகழ் நான்மறைவேள்வி
ஐந்து ஆறங்கம் பன்னினர்வாழ்
நீடுபொழில் திருவாறன் விளைதொழ
வாய்க்குங்கொல் நிச்சலுமே.

குறிப்புக்கள்:-ஆடும் பறவை-கெருடபகவான் தன் மீது எம்பெருமான் எழுந்தருளும் நிமித்தம் உற்சாகங்கொண்டுநர்த்தநம்செய்வதாக அருளிச்செய்கிறார். கைதொழுதன்றி - ஆறன்விளையினின்றும் எம்பெருமான் ஆழ்வாருக்கு ஸேவை கொடுக்கும் நிமித்தம் கெருடாரூடராய் வந்தருளுகிறாரென்று தாமதைக் கண்டு கைகூப்புச் செய்யும் மானஸாநுபவத்தை அருளிச்செய்கிறார். முதல் பாசுரத்தில் திருப்பதிகளின் எம்பெருமான்களை ஆழ்வார் தரிசித்ததாக அங்கு மிங்கும் பேசுவது அவர் ஆங்காங்குப்போய்த் தெரிசித் தல்லவென்று எழுதியிருப்பது கவனிக்கத் தக்கது. இப்பாசுரத்தில் இவ்விதமான மானஸாதர்சனம் அன்றிக்கே தினம் அவன் உறையும் திருவாறன்விளை க்ஷேத்திரத்துக்குச் சென்று அங்கு ஸ்திரவாஸம்செய்து தொழும் பாக்கியம் கிட்டுமோவென்கிறார்.

நான்மறை வேள்விஐந்து-4 வேதங்களில் எழுதியுள்ளபடி பஞ்சமஹா எக்ஞத்தை இலக்குவைத்துச் சொன்னபடி. ஆறு அங்கம்-ஆறு அங்கங்களின் விதிப்படி அனுஷ்டிப்பது. வேதியர் - பன்னினர் - ஆவர்த்திகளால் இவற்றில் நன்கு பழகித் தேர்ச்சியடைந்து நிபுணர்கள் என்று பேர்பெற்றவர்.

நிச்சல் - நித்தியவாஸம்செய்து ஸேவைசெய்தலைச் செப்பியபடி.

4-ம் பாசுரம்

வாய்க்குங்கொல் நிச்சலும் எப்பொழுதும்
மனத்து ஈங்கு நினைக்கப்பெற
வாய்க்கும் கரும்பும் பெருஞ்செந்
நெல்லும் வயல்சூழ் திருவாறன்விளை
வாய்க்கும் பெரும்புகழ் மூவுலகீசன்
வடமதுரை பிறந்த
வாய்க்கும் மணிநிறக் கண்ணபிரான்தன்
மலரடிப் போதுகளே.

சென்ற பாசுரத்தில் திருவாறன்விளையில் நித்தியவாஸம்செய்து தினம் தினம் தொழப்பெறுமோ வென்றவர் இப்பாசுரத்தில் தாமிருக்கும் திருக்குருகூர் தன்னிலேயே, முன் வடமதுரையில் பிறந்து உலகத்தைகாத்து அளித்த திவ்விய அவயவ சோபையையுடைய கண்ணபிரானின் அழகிய வயல்சூழ் திருவாறன்விளையில் அவனது திருவடிகளில் ஒரு தினமாத்திரமல்ல எல்லாக்காலத்திலும் ஓய்வின்றித் தமக்குக் கிடைத்தல் வேண்டுமென்று அபேக்ஷிக்கிறார்.

குறிப்பு:—"ஈங்கு" என்பதற்கு "இக்காலத்தில் பிறந்து இவ்வுலகத்திலேயே நின்று திருவாறன்விளை அப்பன் திருவடிகளைத்தியாநிக்கவமையுமென்கிறாரென்று கூறவும் கூறலாம்.

5-ம் பாசுரம்

மலரடிப் போதுகளென் னெஞ்சத்து
எப்பொழுதும் இருத்தி வணங்கப்
பலரடியார் முன்பு அருளிய
பாம்பணை யப்பன் அமர்ந்துறையும்
மலரின்மணி நெடுமாடங்கள்
நீடுமதிள் திருவாறன்விளை
உலகமலி புகழ்பாட நம்மேல்
வினையொன்றும் நில்லா கெடுமே.

குறிப்புக்கள்:— திருவாறன்விளை அமர்ந்துறையும் பாம்பணையப்பன் திருவடிமலர்களை என்னெஞ்சத்து இருத்தி வணங்கினேன்; இதன் பயனாக ஸர்வகலா வல்லபனாகிய ஆதிசேஷனுடனே வெகு உகப்பாய் ரஸித்து ஸ்ரீயப் பதியானவன் உலகமே புகழ்பாட பல அடியார் முன்பே அருளினான். அதாவது வியாசர் பராசரர் வால்மீகி முதலாழ்வார்கள் முதலிய பல "இன்கவி பாடும் பரமகவிகள் தனக் குளவாயிருக்க"ச் சென்ற தசகம் 6-ம் பாசுரம் "உறப் பல இன்கவி சொன்ன உதவி" ஷை 9-ம் பாசுரம் மேற் செப்பிய பரம கவிகளுக்கும் "முன்பு" (முதன்மையாக) ஆழ்வாரை நன்கு மதித்துத் திருவாய்மொழி பாடுவித்து அதைக் கேட்கத் திருவாறன்விளையில் அமர்ந்தானென்று "தன் னெஞ்சத்தில் இருத்திய" (அதாவது ஸதா தியானஞ் செய்த) நிமித்தமாய்த் தவப் பயனைப் புகழுகிறார். இப்பாட்டுக்களைக் கேட்க முதல் பாசுரத்தில் "எழில் மாதர்" (இலக்குமியை மரியாதைப் பன்மையாய் விவஹரித்தபடி) எழுந்தருளி யிருப்பதாக ஏற்கனவே விபரம் கூறினவர், இப்பாசுரத்தில் பாம்பணைமீது திருவும் மாலும் வீற்றிருப்பதை அருளிச்செய்கிறபடியால் "இன்பம் பயக்கும்" திருவாய் மொழியின் ரஸாநுபவம் செய்யச் சபையில் மூவர் உளராயினர் - ஆதிசேடன் - (பாம்பு) பரமகவி பரமரஸிகன். ஏறக்குறைய முன்னூறு வருஷங்களுக்கு முன்னர்க் காஞ்சி மண்டலத்தில் சுவயமே கவியாயிருந்த சோழராஜனது சபையில் பிறபல கவிகள் ஒன்றுகூடியிருந்தாலும் இதில் முக்கிய பிரபல கவியாயிருந்த வீரராகவப் புலவர் என்பார் இறந்து போகவே ஷை சோழராஜனே "அந்நாள் கவிகளுள் சேடனும் வால்மீகனும் புக்கொளித்தார் இந்நாட்டுக் கவிகளில் உனக்கு நிகரிலையே மேல்நாட்டுப் புலவரோடு வாது செய்யப் போயினையோ கவி வீரராகவா?" எனப் பாடினானென்று சரித்திரம். ஆதிசேடன் பரமகவி. பரம ரஸிகர்களே முன்பு ஆழ்வாரை விளித்துக் கவிபாடி வைத்தல் அதிசயமான ஸம்மானமென்று திருவுள்ளம். இது போலவே மஹாபக்த சிகாமணியாகிய அநுமானுக்கு ஸ்ரீ ராமபிரான் பட்டாபிஷேக மஹோத்ஸவத்தில் ஸீதாபிராட்டியின் அநுமதி பெற்றுச் சக்கரவர்த்தி

திருமகனுக்கே தருமென்று ஸமர்ப்பித்த அதி யத்புதமான முத்துமாலையைத் தேவேந்திரன் அனுப் பியதைப் பரிசாக ஸபையில் இராமபிரான் அளித்தது ஞாபகத்துக்கு வருவது குறிக்கத் தக்கது. இராஜ பக்தி ஒன்றிலே ஊன்றி ஆட்செய்வதே கடைமையாகப் பூண்டு மற்றொன்றிலும் ஆசை வைக்காத அநுமான் முத்துமாலையைத் தரித்து மேல்படி பட்டாபிஷேகசபையில் வீற்றிருந்த முதலிகளெல்லாரும் அநுமானுக்கு வாய்த்த பேறு சாச்வத புகழ் தருவதென வியப்புற்றுக் களிப்புற்றார்கள்.

இவரே பரதன் இராமபிரான் இராஜ்ஜியம் ஒழிந்திருந்த பன்னிரண்டு வருடங்கள் இராஜ்ஜியபாரத்தை ஏற்று அயோத்தியை யாண்டு வருகையில் இராமபிரான் அவ்விடத்துக்குளெழுந்தருளப்போவதைமுன் கூட்டிவந்து தூதனுகச் செய்தி பரதனுக்குக்கொண்டு வந்தார். அப்போழ்து பரதன் இராமப்ரபு வரப்போகிறுரென்ற உற்சாகத்தால் தன் அளவுகடந்து அநுமானுக்கு ஸன்மானமாக ஏழு உபராஜ்ஜியங்களை, கொடுப்பதாகச்சொல்லவும், பலர் அதைப்பாராட்டாமலிருக்கப் பிறகு வேண்டுமளவு பொற்குவியல்களை அளிப்பதாகசொன்னுன்; இதையும் மறுக்கவே பற்பல ஆபரண ஆடைகள் தருவதாக வாக்களித்தும் வாளாவிருக்க இவருக்குத்தக்கதோர் ஸன்மானமாய் ஏழு வரகன்னிகைகளை ஈந்தால் அநுமார் ஆவலுடன் கைபற்றுவாரென்று பரதர் மேற்படிகன்னிகாதானம் அளிப்பதாகவேண்டியும் அநுமான் இசையாததைக் கணிசித்தால், இராமபிரானின் அரிய பிரஸாதத்தைச் சிரஸால் வஹித்து ஆநந்தபரிதராய் விளங்கியது வியப்பேயாம்.

இப்பாசுரத்தின் கருத்து - திருவாறன்விளையைத் தொழுபவர்களின் பாபங்கள் எல்லாம் நசித்துப் போம் என்ற அந்தப்பாசுரத்தில்பரோபதேசம் செய்வதின்நிமித்தம்.

கதையின் சுவை, நடிப்பின் திறமை, மின்னல், இடி, நீர் அருவி, பாலம் உடைதல், சூரியோதயம், தீ வளர்தல் முதலிய அதிசயக் காட்சிகள் அமைந்த புதிய நாடகம். சென்னையிலும் காஞ்சீபுரத்திலும் சிறப்பாக நடந்தது.

# பிஸாரோ நாடகம்

## P. S. வேலு நாயர்
## K. S. அனந்தநாராயண ஐயர்
## T. N. சேஷாசலம் ஐயர், B.A., B.L.

முக்கியமான பாகங்களை ஏற்று நடிப்பார்

## காரைக்குடி

ஷண்முகா விலாஸ் கொட்டகையில்

யுவ௵ தைமீ 3உ (16உ ஜனவரிமீ 1936) வியாழக்கிழமை இரவு 9-30 மணி

## வலம்புரி

எலக்டிரிக் டவுன் ஹாலில்

யுவ௵ தைமீ 5உ (18உ ஜனவரிமீ 1936) சனிக்கிழமை இரவு 9-30 மணி

பல போலிகள் இருப்பதால் நம் பிக்கையடைய நேரில் எழுதுக.

ஜிஞ்சிப்
அஜீர்ண பித்த சமனம்

ரூ. ஒன்று அனுப்பி 12 பாக்கெட்கள் நஞ்சன்கூடு பல் பொடி வீட்டில் பெறுக.

நஞ்சன்கூடு பல்பொடி

சோல் ஏஜண்ட்கள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

KALANILAYAM
REG. NO. M. 2324.

## புத்தகவரவு

மார்க்க அரேலியர் ஆத்ம சிந்தனை. உரோமன் சக்கரவர்த்தியாயிருந்தும் தத்துவ வுணர்வுமிக்க வித்தகத்தால் வாழ்க்கைக்கு வழிகாட்டிய மார்க்கஸ் அரீலியஸ் என்பவர், 1800 வருடங்களுக்குமுன், அவ்வப்போது தம் சிந்தனையின் ஆழத்தினின்று தோன்றிய அருமையான கருத்துக்களைத் திரட்டிவரைந்துளார். அன்னதனை ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தமிழில் மொழிபெயர்த்துத்தர, லோகோபகாரியின் ஆசிரியர் ஸ்ரீமான் நெல்லையப்பப் பிள்ளை அவர்கள் புத்தக உருவமாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். தற்கால, அரசியல் வாதங்களும் பொருளாதார முயற்சிகளும் ஏனைய எல்லாப் பிரசாரங்களுமே நல்வாழ்வின் வழியினின்று மனிதரை எத்தனை தூரம் விலக்கிக் கொண்டுபோகின்றதென்பதையும், மானுட வாழ்வின் உயிர்நிலை எங்குளதென்பதையும் அறிய விரும்புவோர் இந்நூலை அவசியம் வாசித்துச் சிந்தித்தல் வேண்டும். சென்னை சிந்தாதரிப்பேட்டை லோகோபகாரி ஆபீஸில் கிடைக்கும். விலை அணா 8. வி.பி. தபால்தலை யனுப்பிப் போஸ்ட்டில் பெற்றுக் கொள்ளலாம்.

## வர்த்தமானம்

அரிய வீணை:—கிரம்மர்ன விலை எழுபதினாயிரம் பொன். உடையவர் 15,000 பொன்னுக்குக் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார் என்ற விளம்பரம் அமெரிக்கா கனெக்டிகட் நகரத்துப் பத்திரிகை ஒன்றில் வெளியாயிருக்கிறது. அந்த வீணைசெய்து 300 வருஷமாகிறதாம். ஜோனஸ் மரிலி யென்ற பேர்போன சங்கீத வித்வான் அதனைத் தமது கையால் செய்தாராம். பணக்கஷ்டம் காரணமாக அதனை இவ்வளவு குறைந்த விலைக்குச் சொந்தக்காரர் விற்க முன்வந்திருக்கிறாராம்.

* * *

புறாத் தபால்:—ஹங்கேரியிலுள்ள பாஜா என்னுமிடத்தில் வசித்துவரும் விவசாயிகள் மார்க்கெட் விலைகளை அறிந்துகொள்ளப் புறாக்களையே தபால் சேவகர்களாக உபயோகித்து வருகிறார்கள். அங்குத் தந்திமூலம் விலைகளை அறிந்துகொள்ளுவது கஷ்டமாகவும், அதிகப் பணம் செலவு செய்யவேண்டியதாகவு மிருக்கின்றது. ஆகவே, அவர்கள் புறாக்கள் மூலம் சீக்கிரமாகவும், செலவின்றியும் விலைகளை அறிந்துகொள்ளுகிறார்கள். இதற்காகப் புறாக்களைப் பழக்கியிருக்கிறார்கள்.

* * *

நெப்போலியன் கதை:—ஆக்சோன் என்னுமிடத்தில் நெப்போலியன் ஒரு நாவிதன் வீட்டில் தன் வாசஸ்தலத்தை வைத்துக் கொண்டிருந்தான். வெகு நாள் கழித்துப் பிரான்சு தேசத்துச் சேனாதிபதியாக அந்நகரின் வழியே அவன் வரும்போது தான் முன்பு குடியிருந்த நாவிதனின் வீட்டுக்குச்சென்று "இங்கே சில நாளைக்கு முன் நெப்போலியன் என்றொருவன் குடியிருந்தானா" என்று கேட்க, அதற்கு அங்கிருந்த நாவித ஸ்திரீ, "ஆம், அப்பேருள்ள ஒருவன் இருந்தான்; எப்போதும் கதவை மூடிக்கொண்டே உட்கார்ந்திருப்பான். உற்சாகமாயிருப்பதில்லை; வெளியேவந்தால் யாருடனும் பேசுகிறதில்லை" என்று சொல்ல, நெப்போலியன் அவளை நோக்கி, "உன் இஷ்டப்படி நான் உற்சாகமாய் இருந்தால் இத்தேசத்து ஜெனரலாக ஆயிரேன்" என்று சொல்ல, அவளும் அங்கேயிருந்த மற்றவர்களும் மிகுந்த ஆச்சரிய மடைந்தனர்.

* * *

டில்லியைச் சேர்ந்த சிராகானா என்ற ஊர்வாசியான லாலா ஜங் பகதூர் என்பவரின் புதல்வியான சாந்தா என்ற எட்டு வயதுப் பெண் ஜன்ம நினைவு உடையவளா யிருக்கிறாள். அவள் பிறந்து பேசும் பருவம் அடைந்தவுடனேயே தான் போன ஜன்மத்தில் வட மதுரையில் ஒருவருக்கு மனைவியா யிருந்ததாகச் சொல்லி அவர்விலாசத்தையும் தெரிவித்தாள். அவள் தகப்பனார் எழுதியதன்மீது அந்தப் 'புருஷன்' தன் தம்பியை அனுப்பினார். தம்பி வந்தவுடன் அந்தப் பெண் அவர் தனது மைத்துனன் என்று அடையாளம் கண்டுகொண்டாள். பின் அவள் புருஷனே வந்து சேர்ந்தார். அவரையும் அந்தப் பெண் அறிந்துகொண்டு அவருக்கும் அவரது காலஞ்சென்ற முதல் மனைவிக்கும் மட்டும் தெரிந்த சில செய்திகளைச் சொன்னாள். தான் கருப்பமா யிருந்தபொழுது தனக்குப் பிறக்கும் குழந்தை சாகாமலிருந்தால், தேவிக்கு காணிக்கை செலுத்துவதற்காகத் தனது (போன ஜென்ம புருஷன்) வீட்டில் ஓர் இடத்தில் நூறு ரூபாய் புதைத்து வைத்திருப்பதாயும் சொன்னாள். அப்பொழுது பிறந்த அந்தக் குழந்தை சாகாமல் இப்பொழுது பதினொரு வயதுப் பெண்ணாய் வளர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் அந்தக் குழந்தையைப் பெற்ற தாய் பெற்றவுடன் இறந்து போனாள். (அந்தத் தாய் தான் இந்தப் பெண்ணும்).

மேலும் இப்பொழுது தான் டில்லியில் பிறக்குமுன் வேறு ஓர் இடத்தில் பிறந்து இரண்டரை வயதில் இறந்து விட்டதாகவும் சொல்லுகிறாள். மேற்படி புருஷன் அந்தப் பெண் சொல்லுகிற புதையலைப் பார்ப்பதற்காக வட மதுரைக்குத் திரும்பிப் போயிருக்கிறார்.

**Indo-Commercial Bank, Ltd.,**

**Mayavaram.**

Capital, Reserves, etc., as at 30th August 1935 : Rs. 10,62,245.

*BRANCHES :—*

*Madras Office :—*

**107, Armenian Street.**

*Bazaar Branch :—*

**260, China Bazaar Road.**

Madura, Karaikudi, Virudhunagar, Tuticorin, Kumbakonam, Tiruvarur, Erode, Vizianagaram, Pudukottah, Tinnevelly, Salem and Trichinopoly.

*SUB OFFICES:—*

Shiyali, Chidambaram, Conjeevaram and Tanjore.

*All kinds of Banking Business undertaken on terms which may be ascertained on application.*

**S. N. N. SANKARALINGA IYER,**
*Managing Director,*
**107, Armenian Street, Madras.**

**சிறந்த பலவிருத்தி ஔஷதம்**

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**

இனும்! "காம சாஸ்திரம்" இனும் !!

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by